RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

மலர் 9 • இதழ் 4 • அக்டோபர் 2024 • விலை ரூ.18/-

# வெண்மை

தமிழ் மாத இதழ் VENMAI

## எண்ணங்கள்

இனிய
தீபாவளி
நல்வாழ்த்துகள்







Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

மதிப்பிற்குரியவர்களுக்கு...
RAMRAJ
காட்டன்
இந்தியாவின் கலாச்சாரம்

உங்கள் தேவைக்கான
செல்வத்தை
நேர்வழியில் சேர்த்து
உற்சாக வாழ்வுக்கான
பிற செல்வங்களையும் அடைந்து
நிறைவு பெற்று
நல்வாழ்வு வாழ
வழிகளைச் சொல்லும்



# நிறைசெல்வம்
## சிறப்பிதழ்

என்ற இந்தப் பயனுள்ள நூலை வழங்குவதில்
பெருமிதம் கொள்கிறோம்.

# மதிப்பிற்குரியவர்களுக்கு...

**வணக்கம்.**

‘அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீள் ஆயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்வேன்’ என்பது அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி நம் அனைவருக்கும் அளித்த சங்கல்பம். “ஒவ்வொரு மனிதரும், ‘தான் நிறைவாழ்வை வாழ வேண்டும்’ என்கிற உறுதியைத் தினந்தோறும் எடுத்துக்கொள்ள வேண்டும்” என்று வலியுறுத்தினார் அருட்தந்தை.

‘செல்வம்’ என்றால் பணம், சொத்து என்று குறுகிய அர்த்தத்தில் புரிந்துகொள்கிறோம். செல்வந்தர் என்றால் ‘பணம் நிறைய உள்ளவர்’ என்று பொருள் இல்லை. அவரைப் பணக்காரர் எனக் குறிப்பிடலாம். பணத்தை எளிதில் சம்பாதிக்க அவருக்கு நன்றாகத் தெரியும். அதே சமயத்தில் அந்தச் செல்வந்தருக்கு, தன்னிடம் உள்ள பணத்தை எப்படி அர்த்தப்பூர்வமாகச் செலவழிப்பது என்பதும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு பத்திரிகையில் படித்த ஒரு செய்தி இன்னமும் மனதில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. தென் தமிழகத்தில் உள்ள தாலுகா அளவிலான சிறுநகரில் ஒருவர் பூக்கடை நடத்தி வந்தார். சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள் பூ, மாலை என எதுவாக இருந்தாலும் அந்தக் கடையில்தான் வந்து வாங்குவார்கள். வாடிக்கையாளர்களிடம் இன்முகத்துடன் பழகியதால் பூக்கடை தொய்வில்லாமல் போதுமான லாபத்தில் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கடையை விட்டால் வாடிக்கையாளர்கள் இரண்டு அல்லது மூன்று மணிநேரம் பயணம் செய்து மதுரைக்கு வந்துதான் மாலை போன்றவற்றை வாங்க வேண்டும்.

ஒருமுறை வெளியூர் போனதால் இரண்டு நாட்கள் கடைக்கு விடுமுறை விட்டபிறகு காலையில் கடையைத் திறந்தார் கடை உரிமையாளர். அவரிடம் அருகில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த வாடிக்கையாளர் மிகவும் மன வருத்தத்துடன் பேசினார்.

இரவில் அந்த வாடிக்கையாளரின் தந்தை திடீரென இறந்துவிட்டார். இறந்தவரின் உடலுக்கு உடனடியாக மாலை அணிவிக்க வேண்டும். இரவு பத்து மணிக்கு மேல் பேருந்து எதுவும் இல்லை. இவரின் பூக்கடை பூட்டி இருந்தது. அதனால், காலையில் முதல் பேருந்து வந்த பிறகு மதுரைக்குப் போய் மாலை வாங்கி வந்து தந்தையின் உடலுக்கு அணிவிக்க வேண்டிய சூழல் வந்தது. இறந்தவரின் உடலுக்கு இரவெல்லாம் மாலை அணிவிக்க இயலாத மனக்குறையைக் கடை உரிமையாளரிடம் பகிர்ந்துகொண்டார் வாடிக்கையாளர்.

அன்று இரவு முழுக்கப் பூக்கடைக்காரருக்குத் தூக்கம் வரவில்லை. சுற்று வட்டாரத்தில் அத்தனை ஊர்களில் இருந்தும் வாடிக்கையாளர்கள் நம்பிக்கையுடன் அவர் கடைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு அவசரத் தேவை வரும்போது அதை நிறைவேற்றும் பொறுப்பு தனக்கு இருப்பதை அவர் உணர்ந்தார். அதற்காக அந்தச் சிறிய ஊரில் 24 மணி நேரமும் கடையைத் திறந்துவைக்க முடியாது.

விசேஷ நாட்களில் அதிகபட்சம் 500 ரூபாய் சம்பாதிக்கிற சிறு வியாபாரி அவர். தன் பொறுப்பை உணர்ந்த பிறகு, தினமும் இரண்டு மாலைகளைக் கடை சாத்தும்போது வெளியில் வைத்துவிட்டுப் போய்விடுவார். சுற்றியுள்ள கிராமங்களில் இறப்பு நிகழ்ந்தால், யார் வேண்டுமானாலும் வந்து மாலையை இலவசமாக எடுத்துச் செல்லலாம்.

500 ரூபாய் சம்பாதிக்கும் ஒருவர், நூறு ரூபாய் மதிப்புள்ள மாலைகளைத் தினமும் இலவசமாகத் தனது வாடிக்கையாளர்களுக்குத் தர முன்வருகிறார் என்றால், அவர்தான் மிகப்பெரிய செல்வந்தர். அவரிடம் உள்ள செல்வம் நிறை செல்வம்.

தினம் நூறு ரூபாய் சேர்த்து வாழ்வில் அடைந்த மகிழ்ச்சியைவிடவும், நூறு ரூபாயை ஆக்கப்பூர்வமாகச்



செலவிட்டு அடையும் மகிழ்ச்சி பெரிது. பணம் சேர்க்கும் வழிகளைச் சொல்லித்தர நிறைய படிப்புகள் இப்போது வந்துவிட்டன. 'குறுகிய காலத்தில் கோடீஸ்வரர் ஆகலாம்' என்று சொல்லிக்கொடுக்கத் தனிப்பயிற்சி வகுப்புகள் வந்துவிட்டன. இன்று ஒரு லாட்டரி சீட்டு வாங்கியவருக்கு அதிர்ஷ்டம் இருந்தால், நாளையே அவர் கோடீஸ்வரர். ஒரே இரவில் அவரிடம் பணம் சேர்ந்துவிடும். செல்வத்தைச் சேர்ப்பதைவிட, ஆக்கப்பூர்வமாகச் செலவழிக்கத் தெரிந்தவர்களே நிரந்தரச் செல்வந்தர்கள். நோக்கம் இல்லாத செயல், திசை தெரியாமல் தடுமாறும்.

தன்னிடம் உள்ள பணத்தில் புத்தகம் வாங்கிப் படிக்க வேண்டும் எனத் தோன்ற வேண்டும். கஷ்டத்தில் இருப்பவர்களை நம்மிடம் உள்ள பணம் கைத்தூக்கி விட வேண்டும். நம் தேவைகள் போக, அறம் செய்ய வேண்டும் என்ற மனநிலை இருப்பது அவசியம். தேங்கி நிற்கும் தண்ணீரால் கேடு அதிகம், நோய் பரவும். நீரோட்டம்தான் தண்ணீரின் தூய்மையை உறுதி செய்யும். பயன்களை அதிகரிக்கும். ஒரு நதி தான் ஓடும் பகுதியையெல்லாம் செழிப்பாக்குகிறது. நம்மிடம் உள்ள செல்வமும் தேங்கி நின்றுவிடாமல் பயன்மிக்கதாக மாறவேண்டும்.

ஊரின் நடுவே உள்ள பெரிய மரத்தின் பயன், ஆயிரக்கணக்கான பறவைகள் வந்து அமர இடம் தருவதும், இனிய பழங்களைத் தந்து பசியாற்றுவதும்தான். பறவைகள் வந்து அமராத மரத்தின் பழங்கள் சுவையற்றவை. அதன் ருசி, நிறை ருசி இல்லை. ஒவ்வொரு படைப்பிற்கும் ஒரு நோக்கத்தை இயற்கை வைத்திருக்கிறது. பணம் மட்டும் செல்வம் இல்லை. நம்மிடம் உள்ள எல்லா நல்ல விஷயங்களுமே செல்வம்தான். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது நாம் அறிந்த உண்மை. நம் ஆரோக்கியத்திற்கு இணையான செல்வம் வேறில்லை.

திருமணத்தில் பெரியவர்கள் மணமக்களை வாழ்த்தும்போது 'பதினாறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என வாழ்த்துவார்கள். பெருவாழ்வு வாழ வேண்டுமெனில் பதினாறு வகையான செல்வங்களைப் பெற்றிருக்க வேண்டும். கல்வி, அறிவு, ஆயுள், ஆற்றல், இளமை, துணிவு, பெருமை, பொன், பொருள், புகழ், நிலம், நன்மக்கள், நம்பிக்கை, நோயின்மை, முயற்சி, வெற்றி என 16 வகை செல்வங்களைக் குறிப்பிட்டனர் முன்னோர். இவற்றை நிறை செல்வம் என்றே பெரியோர் குறிப்பிட்டனர்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி 'நிறைசெல்வம்' என்று கூறுவது மனநிறைவைத் தருகிற செல்வத்தைத்தான். ராம்ராஜ் காட்டன் நிறுவனம், வர்த்தகத்தைப் பெருக்குவதில் செலுத்துகிற அதே அக்கறையை, சமுதாயப்பணிகளுக்கும் செலுத்துகிறது. ஆண்டுதோறும் நிறுவனம் வளர்ச்சி அடைகிறது என்பதை, 'எவ்வளவு ஆண்டு வருமானம் ஈட்டுகிறோம்' என்பதில் இருந்து நான் பார்ப்பதில்லை. 'ராம்ராஜ் காட்டன் நிறுவனம் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகிறது,




எத்தனை நெசவாளர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சியைக் கொண்டுசேர்க்கிறது, எத்தனை சமுதாய மேம்பாட்டுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறது' என்பதெல்லாமே வளர்ச்சியின் தவிர்க்கமுடியாத அங்கம். 'நிறுவனத்தின் வளர்ச்சி என்பது எத்தனை பேரின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்திருக்கிறது என்பதைப் பொறுத்தே அளவிடப்பட வேண்டும்' என்று நிறுவனத்தில் பொறுப்பு வகிப்பவர்களிடம் வலியுறுத்திச் சொல்வேன்.

பிறரை மகிழ்வித்து மகிழ்வதே வாழ்வின் அர்த்தம். அதுவே நிறைசெல்வம். எங்களின் மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்கள், உறுதுணையாக இருக்கும் நேசத்துக்குரிய நெசவாளர்கள், பெருமைக்குரிய விற்பனையாளர்கள், எங்களுடன் இணைந்து பணியாற்றும் அன்பான அலுவலர்கள், பாசத்துக்குரிய பணியாளர்கள், 'வெண்மை' வாசகர்கள் ஆகிய அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துகள். நம் உள்ளங்களில் நம்பிக்கையின் தீபம் ஒளிரட்டும். இல்லங்களில் மகிழ்ச்சி நிலைக்கட்டும்.

குரு அருள்

வாழ்க வையகம்... வாழ்க வளமுடன்!



The Culturepreneur

**கே.ஆர்.நாகராஜன்**
நிறுவனர் – ராம்ராஜ் காட்டன்

# நிறைவான செல்வம் எது?

விவசாயி ஒருவரின் வீட்டுக்கு யாசகம் கேட்டு வந்தான் ஒருவன். அந்த நேரத்தில் தன் மனைவி அன்பாகப் பரிமாற, விவசாயி வீட்டில் அமர்ந்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அதைப் பார்த்தபடி தனக்கான யாசகமாக உணவைப் பெற்றுவந்த பிச்சைக்காரனுக்கு ஏக்கம் வந்தது. 'இந்த விவசாயிக்கு வீட்டில் அன்பாக உணவு பரிமாறுகிறார்கள். நாம் இப்படி நாள் முழுக்க அலைந்து உணவு தேட வேண்டியுள்ளதே' என்று தன்னை நினைத்து நொந்துகொண்டான்.

விவசாயி சாப்பிட்டு முடித்ததும் கடைவீதிக்குப் போனார். தன் வயலில் நடவு செய்வதற்காக வட்டிக்கடை ஒன்றில் கடன் வாங்கினார். வட்டிக் கடைக்காரர் தன் இரும்பு லாக்கரிலிருந்து பணத்தை எடுத்து விவசாயிக்குக் கொடுத்தார். விவசாயி திரும்பி வரும்போது, 'நாம் எவ்வளவு உழைத்தாலும் கையில் பணம் தங்குவதில்லை. இவர் லாக்கர் நிறைய பணம் வைத்திருக்கிறாரே' என்று ஏக்கத்துடன் நினைத்துக்கொண்டார்.

அந்த வட்டிக்கடைக்காரர் ஒரு தொழிலதிபரிடம் குறைந்த வட்டிக்குப் பணம் வாங்கித் தொழில் செய்கிறார். அவருக்குஇந்தமாதவட்டியைக்கொடுப்பதற்காகப்போனார். தொழிலதிபரிடம் வட்டிப் பணத்தைக் கொடுத்தபோது, 'இந்த மனிதர் உட்கார்ந்த இடத்திலேயே எந்த ரிஸ்க்கும் இல்லாமல் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறாரே' என்று வட்டிக்கடைக்காரர் நினைத்துக்கொண்டார்.

தொழிலதிபர் அந்த நேரத்தில் பெரும் கவலையில் இருந்தார். அவர் முதலீடு செய்திருந்த தொழில் லட்சக்கணக்கில் நஷ்டம் அடைந்திருப்பதாக அப்போதுதான் செய்தி வந்திருந்தது. 'என்ன செய்வது' என்று புரியாத குழப்பத்தில் அவர் ஜன்னல் வழியே வெளியில் வேடிக்கை பார்த்தபோது, பிச்சைக்காரன் அங்கே ஒரு தெருநாயுடன் விளையாடிச் சிரித்துக்கொண்டிருந்தான். 'யாசகம் செய்து பிழைக்கும் இவன் இவ்வளவு சந்தோஷமாக இருக்கிறான். நமக்கு எவ்வளவு கவலைகள்!' என்று ஏக்கத்துடன் நினைத்துக்கொண்டார்.

இப்படித்தான் அடுத்தவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்வதாக நினைத்துப் பலரும் நிம்மதி தொலைக்கிறார்கள். உண்மையில் நிறைவான செல்வத்தை எப்படிப் பெறுவது?

- கோடையில் வெயில் கொளுத்தும், பனிக்காலத்தில் குளிர் நடுக்கும், மழைக்காலத்தில் எங்கும் ஈரமாக இருக்கும். எதுவும் நிரந்தரம் இல்லை. பருவநிலை மாறிக்கொண்டே இருக்கும். வாழ்க்கையிலும் பருவங்கள் மாறும். நல்ல தருணங்கள் நிறைய வரும், வரிசையாக நன்மைகள் நடக்கும். திடீரென ஏதோ ஒன்று மோசமாக நடக்கும்போது நொறுங்கிப் போகக்கூடாது. வேலையில் ஒரு நெருக்கடியோ, வியாபாரத்தில் ஒரு தேக்கநிலையோ,



தொழிலில் ஒரு பின்னடைவோ, எது வந்தாலும் அது ஒரு பருவமாற்றம் போன்றதே! 'இந்த நிலை மாறும், நல்லது நடக்கும்' என்று நம்பினால், உங்களிடம் நிறைசெல்வம் உள்ளது.

● 'மாற்றம் ஒன்றே மாறாதது' என்பார்கள். உங்கள் கண்ணெதிரே உங்கள் தெரு உருமாறுகிறது, கிராமங்கள் நகரங்களாக மாறுகின்றன, உங்கள் வீட்டில் இருக்கும் பொருட்களும் காலமாற்றத்தில் மாறிக்கொண்டே இருக்கின்றன. சில மாற்றங்கள் நிதானமாக நிகழும், சில வேகமாக நிகழும். வாழ்க்கையில் மாற்றம் என்பது ஓர் அங்கம். அர்த்தமுள்ள முன்னேற்றத்தை அடைய விரும்பினால், நீங்கள் மாற்றத்தை ஏற்றாக வேண்டும். நீங்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும், மாற்றங்கள் வந்தே தீரும். மாற்றத்தை நீங்கள் ஏற்காவிட்டால், அது உங்களை அங்கிருந்து மாற்றிவிடும். இதுதான் யதார்த்தம். எனவே, மாற்றங்களை ஏற்கத் தயாராகுங்கள். மாற்றங்களின் அங்கமாக இருங்கள், நீங்கள் முன்னேறுவதன் அடையாளம் அதுதான். மாறாத ஓர் இடத்தில் நீங்கள் இருந்தால், தேங்கிப் போய்விட்டதாக அர்த்தம்.

● நாம் கடைகளில் பார்க்கும் ஒவ்வொரு பொருளின் மீதும் ஒரு விலை எழுதப்பட்டிருப்பது போல, இந்த உலகம் ஒவ்வொரு மனிதருக்கும் ஒரு மதிப்பைக் குறித்து வைக்கிறது. அது உங்களிடம் இருக்கும் பணத்தையோ, கல்வியையோ, நீங்கள் அடைந்த வெற்றிகளையோ வைத்து அளவிடப்படுவதில்லை. நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதில் கற்றுக்கொண்டு தனிப்பட்ட முறையில் அடைந்த வளர்ச்சியை வைத்தே மதிப்பிடுகிறார்கள். பட்டை தீட்டப்படாத வரை ஒரு வைரக்கல்லை வெறும் கரித்துண்டு என்றே நினைப்பார்கள். நீங்கள் ஒரு துறையில் மதிப்புமிக்கவர் என்று நிரூபித்துவிட்டால், அதன்பின் பணத்தைத் துரத்திக்கொண்டு ஓட வேண்டியதில்லை. பணம் உங்களைத் துரத்திக்கொண்டு வரும்.

● எதைச் செய்தாலும் ஆர்வத்துடன் செய்பவர்களே அதில் வெற்றி காண்கிறார்கள். அவர்கள் தங்கள் உழைப்பில் மனநிறைவும் அடைகிறார்கள். நிறைவான செல்வமும் அவர்களைத் தேடி வருகிறது. இந்த உலகில் மனிதர்கள் அடைந்த மிகப்பெரிய வெற்றிகள் பலவும், அவர்களின் ஆர்வத்தினால் கிடைத்தவைதான். நாம் இப்போது பயன்படுத்தும் நவீனக் கண்டுபிடிப்புகள் பலவும், ஆர்வத்துடன் அறிவியல் அறிஞர்கள் உருவாக்கியவைதான். நாம் ரசிக்கும் மிகச்சிறந்த பாடல்கள், ஆர்வமும் ஈடுபாடுமாக இசைக்கலைஞர்கள் உருவாக்கியவைதான். ஒவ்வொரு வெற்றிகரமான மனிதரின் சாதனையிலும், அவரின் ஆர்வம்



கலந்திருக்கிறது. ஆர்வம் என்பது விலைமதிப்பற்றது. பிரச்னைகளையும் பின்னடைவுகளையும் சந்தித்து, இந்த முயற்சியிலிருந்து விலகிவிடலாமா என்றெல்லாம் யோசனை எழும்போது, ஆர்வமே கைகொடுக்கும்.

● வாழ்க்கையில் நெருக்கடிகளையும் பிரச்னைகளையும் எதிர்கொள்ளத் தயங்காதீர்கள். அவைதான் நம்மைப் புடம்போட்டுத் தங்கமாக மாற்றுகின்றன. அலைகளின் சீற்றத்துடன் கொந்தளிக்கும் கடலில் படகைச் செலுத்தி முன்னேறத் தெரிந்தால்தான் ஒருவரால் மீன்பிடிக்க முடியும். கரைதொட்டுப் பாயும் நதியைக் கட்டுப்படுத்தத் தெரிந்த ஒருவரால்தான், அந்த நதியின் குறுக்கே பாலம் கட்ட முடியும். வலி தரும் ஒரு பிரச்னையைக் கடந்த ஒருவருக்கு, அதேபோன்ற பிரச்னை அடுத்த முறை மிகவும் சாதாரணமானதாக மாறிவிடும். அப்படிப்பட்ட மன உறுதியை நமக்கு, நாம் சந்திக்கும் பிரச்னைகளே தருகின்றன.

● வானில் சீறிப்பாயும் ராக்கெட்டுக்கு ஓர் இலக்கு உண்டு. அதுதான் சுமந்துசெல்லும் செயற்கைக்கோளை விண்ணில் நிலைநிறுத்தப் போகிறது. அப்படி உங்கள் வாழ்வின் இலக்கு என்ன, அர்த்தம் என்ன என்று சிந்தியுங்கள். அது உங்களை வாழ்வில் எதை முதன்மையாகக் கருதுவது என்று தீர்மானிக்க வைக்கும். அதற்கான திட்டங்களைத் தீட்ட முடியும். இத்தனை காலமாகத் தள்ளிப் போட்டிருந்த வேலைகளை உடனடியாகச் செய்ய வைக்கும். எப்படிப்பட்ட தடைகளையும் தாண்டி உங்களை முன்னோக்கிச் செல்ல வைக்கும். உறுதியான முயற்சிகளைச் செய்து உங்களை வளர வைக்கும். ●

# அதுவும் உயர வேண்டும்!

பலரும் தங்கள் வருமானம் உயரும்போது செலவுகளை அதிகமாக்கிக்கொள்வார்கள். அதுவரை பைக்கில் போய்க்கொண்டிருந்தவருக்கு கார் வாங்கத் தோன்றும். அதிக வாடகை கொண்ட பெரிய வீட்டில் குடியேறச் சொல்லும். ஒவ்வொரு வார இறுதியிலும் எங்காவது பயணம் போக நினைப்பார்கள்.

ஆனால், முதலீட்டு நிபுணர்கள் சொல்லும் யோசனை என்ன தெரியுமா? உங்கள் வருமானம் உயரும் ஒவ்வொரு தருணத்திலும் உங்களின் சேமிப்பும் முதலீடும் அதற்கு ஏற்றபடி அதிகரிக்க வேண்டும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்துவிட்டு இப்படிச் சேமிப்பது அந்த நேரத்தில் வலி தருவதாகவே இருக்கும். அதைச் செய்வதும் கடினமான விஷயம்தான். ஆனாலும், அதைச் செய்தால்தான் பொருளாதார வளர்ச்சி கிடைக்கும்.



# வசதியும் வறுமையும்!

● உங்களுக்குக் கடன் இருந்தால், நீங்கள் ஏழை. சொத்துகள் இருந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலி. பணம் இருந்தால், நீங்கள் கொடுத்துவைத்தவர். வாழ்க்கையில் அமைதி இருந்தால், நீங்கள் பணக்காரர். மனதில் நிறைவு இருந்தால், உங்களைவிட வசதியானவர் யாருமில்லை.

● உங்களிடம் பொறாமை இருந்தால், நீங்கள் ஏழை. நம்பிக்கை இருந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலி. மகிழ்ச்சி இருந்தால், நீங்கள் கொடுத்துவைத்தவர். பிறருக்கு உதவ முடிந்தால், நீங்கள் பணக்காரர். மனதில் அன்பும் நேசமும் இருந்தால், உங்களைவிட வசதியானவர் யாருமில்லை.

● உங்களிடம் அறியாமை இருந்தால், நீங்கள் ஏழை. கல்வி இருந்தால், நீங்கள் அதிர்ஷ்டசாலி. எதையும் புரிந்துகொள்ள முடிந்தால், நீங்கள் கொடுத்துவைத்தவர். எதையும் தெளிவாக உணரும் அறிவு இருந்தால், நீங்கள் பணக்காரர். நல்லது கெட்டதை உணர்ந்து எதிர்காலத்தைத் திட்டமிடும் ஞானம் இருந்தால், உங்களைவிட வசதியானவர் யாருமில்லை.



# வெற்றி என்பது ஓர் ஐடியா!

வெற்றி பெற்ற மனிதர்கள் யாரும் பணத்தையோ, வெற்றியையோ தேடி ஓடுவதில்லை. அவர்கள் ஏதோ ஒரு இலக்கை, ஓர் ஐடியாவை உருவாக்கிக்கொண்டு ஓடுகிறார்கள். அதை எப்படி அடைய வேண்டும் என்ற தெளிவான பார்வை அவர்களுக்கு இருக்கிறது. அதனால்தான் அவர்கள் ஜெயிக்கிறார்கள்.

இந்த உலகில் மூன்று வகை மனிதர்கள் இருக்கிறார்கள். ஏழைகள், பணக்காரர்கள், நிறைசெல்வம் உள்ளவர்கள். ஏழைகள் எப்போதும் பணத்தைப் பற்றியே பேசுகிறார்கள். பணக்காரர்கள் எப்போதும் சொகுசு கார், ஆடம்பர மாளிகை என்று பொருட்களைப் பற்றியே பேசுகிறார்கள். நிறைசெல்வம் உள்ளவர்கள் எப்போதும் தங்கள் ஐடியாக்கள், யோசனைகள் பற்றியே பேசுகிறார்கள்.

இவர்கள் மூவருமே வெவ்வேறு விதமாகச் சிந்திக்கிறார்கள். ஏழைகள் பணத்தின் பின்னால் ஓடுகிறார்கள், பணக்காரர்கள் பணத்தையும் பொருட்களையும் குவிக்கிறார்கள். நிறைசெல்வம் உள்ளவர்களோ, பணத்தை உருவாக்குகிறார்கள்.

உங்களிடம் நல்ல யோசனைகளும் செயல்திட்டங்களும் இருந்தால், பணம் உங்களை நோக்கி வரும். நிறைசெல்வம் அடையலாம்.

# மதிப்பாக இருங்கள்!

தவறான நண்பர்களுடன் இணைந்து தன் மகன் ஊர் சுற்றுவதைப் பார்த்துத் தந்தை கவலைப்பட்டார். மகனை ஒருநாள் அழைத்தார். தங்கள் வீட்டில் இருக்கும் நூறு ஆண்டுகள் பழமையான காரை அவனிடம் கொடுத்தார். "இதை எடுத்துக்கொண்டு பழைய பொருட்கள் விற்கும் கடைக்குப் போ. அவர்கள் என்ன விலைக்குக் கேட்கிறார்கள் என்று விசாரி" என்றார்.

''இந்த காரைப் போய் ஏன்பா விற்கணும்?'' என்றான் மகன். "உன்னை விற்கச் சொல்லவில்லை. விலையை மட்டும் விசாரித்துக்கொண்டு வா'' என்றார். மகன் போன வேகத்தில் திரும்பி வந்தான். "எல்லாம் பழைய உலோகமாக இருப்பதால், ஆயிரம் ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள் அப்பா" என்றான். "சரி, பக்கத்து தெருவில் இருக்கும் கார் டீலரிடம் போய் விசாரி" என்றார். மகன் அங்கே போய் வந்து, "ரொம்ப ஓடின பழைய வண்டின்னு பத்தாயிரம் ரூபாய் தர்றதா சொல்றாங்க" என்றான்.

''சரி, பழைய கார்கள் விற்பனை செய்யும் நிறுவனத்திலும் விசாரி'' என்றார். மகன் போய் பரபரப்பாகத் திரும்பி வந்தான். "இந்தியாவிலேயே இப்படிப்பட்ட வின்டேஜ் கார் ஐந்துதான் இருக்கிறதாம். அவர்கள் முப்பது லட்சம் ரூபாய் தருவதாகச் சொல்கிறார்கள்" என்றான்.

"புரிந்துகொள்! அந்த காரின் மதிப்புத் தெரிந்தவர்கள்தான் சரியாக அதன் விலையைச் சொல்லியிருக்கிறார்கள். உன் மதிப்பைத் தெரிந்த இடத்தில் இருந்தால்தான் உனக்கு மரியாதை. மதிப்பே இல்லாத மனிதர்களுடன் சேர்ந்து தவறான இடங்களில் இருந்தால், உன்னுடைய மதிப்பும் போய்விடும். உனக்கு மதிப்புக் கிடைக்காத இடத்தில் இருப்பதை உணர்ந்தால், அந்த நிமிடமே அங்கிருந்து விலகிவிட வேண்டும்" என்றார் தந்தை. மகன் புரிந்துகொண்டான்.





# நிறைசெல்வம் நிலைக்க...

- உங்களின் தனிப்பட்ட வளர்ச்சிக்குப் பணம் செலவிடுங்கள். நீங்கள் எந்தத் துறையில் இருந்தாலும், அதுபற்றித் தேடித் தேடிப் படியுங்கள். உங்கள் தகுதி உயர்ந்தால்தான் உங்கள் வருமானம் உயரும்.

- உங்கள் வேலையோ, தொழிலோ, வியாபாரமோ சம்பாதித்துக் கொடுக்கும் வருமானம் நிலையான அளவில்தான் இருக்கும். பணத்தைச் சாமர்த்தியமாக முதலீடு செய்தால், உங்கள் பணமும் உங்களுக்காகச் சம்பாதிக்கும்.

- உங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் தவறில்லை. பணம் இருக்கிறதே என்பதற்காக எதை எதையோ வாங்கிக் குவிக்காதீர்கள்.

- உங்களைப் போலவே வசதி நிலையில் உள்ள நண்பர்களுடன் பழகுங்கள். உங்களைவிட வசதியான நண்பர்களுடன் நெருங்கியிருந்தால், அவர்களைப் போலவே ஆடம்பரச் செலவுகள் செய்து பணத்தை இழப்பீர்கள்.

நிறைய பணம் சம்பாதிப்பவர் பணக்காரர் இல்லை. பணத்தை எப்படி முதலீடு செய்வது, எப்படிச் சேமிப்பது, எப்படிச் செலவழிப்பது என்று கற்றுக்கொள்பவரே பணக்காரர் ஆகிறார். உங்களைப் பணக்காரர் ஆக்கும் அந்த ரகசியங்கள்:

● பல லட்சம் செலவழித்து வாங்கும் காரை இரண்டே ஆண்டுகளில் பாதி விலைக்கு விற்றுவிட்டு புது கார் வாங்குவார்கள் சிலர். பல ஆயிரம் கொடுத்து வாங்கிய செல்போனை ஒரே ஆண்டில் வெறும் சில நூறு ரூபாய்க்கு எக்ஸேஞ்ச் செய்துவிட்டுப் புது போன் வாங்குவார்கள் சிலர். இந்த வாழ்க்கைமுறை தவறு. இதுபோன்ற மதிப்புக் குறையும் பொருட்களுக்கு அதிகம் செலவு செய்யாதீர்கள். மதிப்புப் பெருகும் நிலம், தங்கம் போன்றவற்றில் முதலீடு செய்யுங்கள்.




● சம்பாதிப்பதைவிட அதிகமாகச் செலவு செய்யாதீர்கள். அது உங்களைக் கடன் வாங்க வைக்கும். அந்தக் கடனுக்காகச் செலுத்தும் வட்டி, உங்களை மீளமுடியாத கடன் சுழலில் மாட்டிவிடும்.

● கடன்களில் கெட்ட கடன்களும் உண்டு, நல்ல கடன்களும் உண்டு. கிரெடிட் கார்டில் செலவழிக்கும் தொகையைக் கட்டாமல் விடுவதால் ஏற்படும் கடன், பர்சனல் லோன் வாங்குவதால் ஏற்படும் கடன் ஆகியவை அதிக வட்டியை ஈர்க்கும் கெட்ட கடன்கள். கடன் வாங்கி வீடு வாங்கினால், அது நல்ல கடன். அதற்கு வட்டியும் ஒப்பீட்டளவில் குறைவு. இந்த வித்தியாசத்தை உணருங்கள்.

● கூட்டுவட்டி என்பது இந்த உலகின் எட்டாவது அதிசயம். ஒரு சேமிப்புத் திட்டத்தில், வருங்கால வைப்பு நிதியில் சேமிக்கும் பணமானது வட்டிக்கு வட்டி சேர்ந்து பல ஆண்டுகளில் பல மடங்கு பெருகிக் கைக்கொடுக்கும். இன்னொரு பக்கம் கடனை அதிகம் சேர்த்தாலும், அதற்கு வட்டி மேல் வட்டி கட்டிச் செலவும் பல மடங்கு பெருகும். எதைச் செய்வது சரி என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

● உங்கள் சேமிப்பு, முதலீடு மற்றும் சொத்துகளின் மதிப்பைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் கணக்கிட்டுப் பாருங்கள். அதிலிருந்து உங்கள் கடன்களைக் கழித்தால் என்ன வருகிறதோ, அதுவே உங்கள் சொத்து. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு நீங்கள் வசதியாகி இருக்கிறீர்களா, அல்லது கடனில் தவிக்கிறீர்களா என்பதை இது சொல்லிவிடும்.

● பணத்தை நீங்கள் எப்படி நிர்வாகம் செய்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே உங்கள் மதிப்பு அளவிடப்படும். கஞ்சத்தனமாக இருக்கக்கூடாது; ஆனால் சிக்கனமாக வாழுங்கள். தேவைக்குச் செலவு செய்யுங்கள்; தேவையற்ற ஆடம்பரம் வேண்டாம்.

● 'நான் வசதியானவன்' என்று காட்டிக்கொள்வதற்காக ஆடம்பரச் செலவுகள் செய்வது தவறு. உங்கள் வாழ்க்கைக்கும் வேலையின் தன்மைக்கும் தேவைப்படும் அளவுக்கான வசதிகளுக்கு மட்டுமே செலவு செய்யுங்கள்.

● உங்கள் வாழ்க்கையில் இலக்கு இருப்பது போலவே, உங்கள் பணத்துக்கும் இலக்கு வையுங்கள். இந்த ஆண்டில் செய்யும் முதலீடு, ஐந்து ஆண்டுகளில் எவ்வளவு பெருக வேண்டும் என்று இலக்கு நிர்ணயம் செய்யுங்கள். அதற்கு ஏற்ற திட்டங்கள் உங்கள் கண்களுக்குத் தெரிய ஆரம்பிக்கும். ●



# தித்திக்கும் தீபாவளி மரபுகள்!

**கங்கா ஸ்நானம்:** தன்னில் நீராடுபவர்களின் பாவங்களைப் போக்கி நற்கதி வழங்குகிறாள் கங்கை அன்னை. தீபாவளித் திருநாள் அன்று சிவபெருமான் உலகிலுள்ள நீர்நிலைகள் அனைத்திற்குமே கங்கையின் புனிதத்தை வழங்குகிறார் என்பது நம்பிக்கை. இந்த ஐதீகத்தின்படி அன்று நம் வீட்டில் உள்ள கிணறு, குழாய் ஆகியவற்றில் வரும் தண்ணீர் அனைத்தும் கங்கை நீராகவே பாவிக்கப்படும். இதனால்தான் அன்று நீராடுவதை 'கங்கா ஸ்நானம் ஆச்சா?' எனக் கேட்பார்கள்.

**மருந்துக் குளியல்:** தீபாவளி அன்று விடியற்காலை குளிக்கும் நீரில் ஆல், அத்தி, புரசு, மாவிலங்கை போன்ற மருத்துவக் குணம் கொண்ட மரப்பட்டைகளை ஊறவைத்துச் சிலர் நீராடுவர். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி கூடும். இந்த வழக்கம் கிராமப்புறங்களில் இன்றும் இருக்கிறது.

**புத்தாடைப் படையல்:** தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்ததும், புத்தாடைகளையும், புதிய பலகாரங்களையும் வைத்து வணங்குவது வழக்கம். இது முன்னோர்களுக்கு வைக்கும் படையல் ஆகும். அன்று பித்ருக்கள் இல்லம் தேடி வருவதாக ஐதீகம்.

**அதிர்ஷ்ட வரவு:** தீபாவளி நாளில் உப்பு வாங்கி வீட்டில் வைப்பது அதிர்ஷ்ட வரவாகக் கருதப்படுகிறது. உப்பில் மகாலட்சுமி வாசம் செய்வதாக நம்பிக்கை.

**தீபஜோதி பூஜை:** தீபாவளிக்கு மறுநாள் தீபஜோதி பூஜை செய்தால் பலவித மங்களங்கள் கிடைக்கும். பூஜையறையில் தலைவாழை இலை போட்டு, அதன்மீது குத்துவிளக்கு வைத்துப் பூஜை செய்தால் வாழையடி வாழையாகக் குடும்பம் தழைக்கும் விதமாக மழலைச் செல்வம் கிடைக்கும். பித்தளை தாம்பாளத் தட்டில் கோலம் போட்டு, சந்தனம், குங்குமம் இட்டு, அதன்மீது குத்துவிளக்கு வைத்தும் வழிபடலாம்.

**கோமாதா பூஜை:** தீபாவளி நன்னாளில் கோமாதா பூஜை செய்வது போற்றப்படுகிறது. பசுவின் உடலில் அனைத்துத் தெய்வங்களும் குடிகொண்டிருப்பதாகச் சாஸ்திரம் சொல்கிறது. அன்று பசுவைக் குளிப்பாட்டி மஞ்சள், குங்குமம், சந்தனம் இட்டு, மலர் சூடி, ஏதேனும் புத்தாடை அணிவித்துப் பூஜை செய்வர். பின்பு, அதற்கு உணவாகப் பச்சரிசி கலந்த வெல்லம், வாழைப் பழங்கள் கொடுத்து வணங்கினால், லக்ஷ்மி கடாட்சம் குடும்பத்தில் நிறைந்து நிற்கும் என்பர்.

**ஸ்ரீதன்வந்தரி ஜெயந்தி:** நோய் இல்லாது நலம் பெருகி வாழ, தன்வந்திரியை வணங்க வேண்டும். தன்வந்தரி பகவான் திருமாலின் அவதாரமாகப் போற்றப்படுகின்றார். தன்வந்தரி ஜெயந்தி, தீபாவளிக்கு முதல்நாள் கொண்டாடப்படுகிறது. வடநாட்டில் பெண்கள் அன்று தன்வந்தரியை வணங்கி நோய் விலக வேண்டுகின்றனர்.

**லட்சுமி பூஜை:** தீபாவளி அன்று வட இந்தியாவில் லட்சுமி பூஜை செய்வது வழக்கம். நாமும் அன்று வீடுகளின் வாசலில் அதிகாலையிலும், மாலையிலும் தீபங்கள் ஏற்றி வணங்கினால், மகாலட்சுமி நல்லருள் புரிவாள்; செல்வம் பெருகும். அன்று லட்சுமியைத் தாமரை மலர் கொண்டு வணங்க வேண்டும்.

**குபேர பூஜை:** தீபாவளிக்கு மூன்றாம் நாள் மகாலட்சுமி பூஜையும், குபேர பூஜையும் செய்வார்கள். அன்று குபேரன் புதுபலம் பெற்றுத் தன்னை வணங்குவோருக்குச் செல்வத்தை அள்ளித் தருவான் என்பது ஐதீகம்.


RAMRAJ



# நிறைசெல்வம் தரும் ஃபார்முலாக்கள்!



கணக்குப் பாடத்தைப் பிடித்துப் படிப்பவர்கள் குறைவு. அப்படி கணக்குப் பிடிக்காமல் போனாலும், அதன் அடிப்படைகள் தெரியாதவர்களுக்குப் பண நிர்வாகம் கைவராது. இங்கு எல்லோருக்கும் ஒரு நாளில் கிடைப்பது 24 மணி நேரம்தான். அதில் அதிகபட்சம் எவ்வளவு நேரம் உழைக்கலாம் என்று கணக்கு இருக்காது. அப்படி எவ்வளவு நேரம் உழைத்தாலும், ஒரு குறிப்பிட்ட அளவே வருமானம் கிடைக்கும். அதைத் தாண்டி வருமானம் பெருக, உங்கள் பணமும் உங்களுக்காக உழைக்க வேண்டும். உங்களின் குடும்பப் பாதுகாப்பும் முக்கியம்.

இதையெல்லாம் கணித்தே, ஒருவர் தனக்கான இன்சூரன்ஸ் எவ்வளவுக்கு எடுக்க வேண்டும், எந்தத் தேவைக்கு எவ்வளவு செலவிட வேண்டும், முதலீடு எப்போது பெருகும், எங்கே எவ்வளவு முதலீடு செய்ய வேண்டும் என்றெல்லாம் நிதித் திட்டமிடல் விதிமுறைகள் உள்ளன. அவை இங்கே:

- 'நீங்கள் முதலீடு செய்யும் பணத்தை மூன்றே ஆண்டுகளில் இரண்டு மடங்காகத் திருப்பித் தருகிறோம்' என்றெல்லாம் ஆசை காட்டி மோசடி செய்யும் குற்றங்கள் அதிகரித்துவிட்டன. உஷாராக இருங்கள். அரசாங்கமே வட்டி விகிதங்களை நிர்ணயிக்கிறது. அதைத் தாண்டிப் பெரிதாக யாரும் கொடுக்க முடியாது என்பதே யதார்த்தம். உங்கள் முதலீடு எப்போது இரு மடங்காக அதிகரிக்கும் என்பதை விதிமுறை 72 (Rule 72) மூலம் எளிதாக அறிந்துகொள்ள முடியும். அதாவது, 72 என்ற எண்ணை வட்டி விகிதத்தால் வகுத்தால் கிடைக்கும் எண் எதுவோ, அத்தனை ஆண்டுகள் ஆகும். உதாரணமாக, ஆண்டுக்கு 8% வட்டி தரும் ஃபிக்ஸட் டெபாசிட் திட்டத்தில் முதலீடு செய்கிறீர்கள் என்றால், உங்கள் முதலீடு 9 ஆண்டுகளில் இரண்டு மடங்காகும். அரசு கடன் பத்திரங்கள், பங்குச்சந்தை சார்ந்த மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்கள் ஆகியவற்றில் வட்டி அதிகம். அவற்றில் பணத்தைப் போடுங்கள்.

● 'பணவீக்கம்' என்று ஒரு விஷயத்தைப் பற்றி அடிக்கடி பலர் பேசுவதைக் கேட்பீர்கள். இதை எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். பணம் மதிப்பானதுதான்! ஆனால், அதை அப்படியே அலமாரியில் பல ஆண்டுகள் பூட்டி வைத்தால், அது மதிப்புக் குறைந்துவிடும். உதாரணமாக, இந்த ஆண்டு 50 ரூபாய்க்கு வாங்கிய பொருளை இரண்டு ஆண்டுகள் கழித்து 60 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. அதாவது, பணம் தன் மதிப்பில் 10 ரூபாய் இழந்துவிட்டதாக அர்த்தம். பணமதிப்பு எவ்வளவு குறைகிறது என்பதை விதி 70 மூலம் அறிந்துகொள்ளலாம். அதாவது, 70 என்ற எண்ணை பணவீக்க விகிதத்தால் வகுத்தால் கிடைக்கும் எண் எதுவோ, அத்தனை ஆண்டுகள் ஆகும். பணவீக்கம் 7 சதவிகிதம் என்றால், நீங்கள் வைத்திருக்கும் பணத்தின் மதிப்பு 10 ஆண்டுகளில் பாதியாகக் குறைந்துவிடும்.

● உங்களின் மொத்த வருமானத்தை எப்படிச் செலவிடுவீர்கள். இதற்கு 50:30:20 என்ற விதியைப் பயன்படுத்த வேண்டும். அதாவது, உங்கள் வருமானத்தில் 50 சதவிகிதத் தொகையை, மளிகைப் பொருள்கள், போக்குவரத்துச் செலவு, வீட்டு வாடகை, மின்கட்டணம்,



மாதாந்திரத் தவணைகள் போன்ற அவசியமான தேவைகளுக்காகச் செலவிடலாம். 30 சதவிகிதத் தொகையைப் பொழுதுபோக்கு, சுற்றுலா போன்ற விருப்பங்களுக்குச் செலவிடலாம். 20 சதவிகிதத் தொகையை எதிர்காலத் தேவைக்கான சேமிப்பு மற்றும் முதலீட்டுக்கு ஒதுக்க வேண்டும்.

● குடும்பத்தில் யாருக்காவது ஏற்படும் திடீர் உடல்நலக் குறைவு தொடங்கி, பல வழிகளில் ஒருவருக்கு எப்போது வேண்டுமானாலும் அவசரச் செலவு ஏற்படக் கூடும். இதைச் சமாளிப்பதற்கான கையிருப்பாக அவசரகால நிதியை வைத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, குடும்பத்தின் மாதச் செலவைப் போல் மூன்று மடங்கு தொகையை இப்படி அவசியம் வைத்திருக்க வேண்டும். இந்தப் பணத்தை எந்த நேரத்திலும் எடுத்துப் பயன்படுத்தும்விதமாக டெபிட் கார்டு மற்றும் ஜிபே வசதி கொண்ட வங்கி சேமிப்புக் கணக்கில் வைத்திருக்க வேண்டும்.


● வீட்டுக்கடன், வாகனக்கடன், குழந்தைகளின் உயர்கல்விக்காகக் கல்விக்கடன் என்று பல அவசியமான கடன்களை நிறைய பேர் வாங்குகிறார்கள். இந்த எல்லாக் கடன்களுக்குமான மாதாந்திரத் தவணைத் தொகை என்பது, ஒருவரின் மாதச் சம்பளத்தில் 40 சதவிகிதத்துக்குள் இருக்க வேண்டும். உதாரணமாக, ஒருவரின் மாதச் சம்பளம் ஒரு லட்சம் ரூபாய் என்றால், அவர் கட்டும் மாதாந்திரத் தவணைகள் 40 ஆயிரம் ரூபாயைத் தாண்டக்கூடாது.

● குடும்பத் தலைவர் ஒவ்வொருவரும் ஆயுள் காப்பீடு செய்துகொள்வது அவசியம். குடும்பத்தில் வருமானம் ஈட்டும் நபருக்கு ஏதேனும் அசம்பாவிதம் நேர்ந்தால், குடும்பம் தடுமாறிவிடும். ஆயுள் காப்பீட்டு இழப்பீட்டுத் தொகையே அப்போது கைகொடுக்கும். குறைந்த பிரீமியத்தில் அதிகக் காப்பீடு கொடுக்கும் டேர்ம் லைஃப் இன்சூரன்ஸ் (Term Life Insurance) என்ற வகைக் காப்பீட்டை இளம் வயதிலேயே செய்துகொள்ளலாம். ஒருவரின் ஆண்டு வருமானத்தைப்போல் குறைந்தபட்சம் 20 மடங்கு தொகைக்கு இந்த பாலிசி எடுப்பது சரியாக இருக்கும். உதாரணமாக, ஒருவரின் ஆண்டு வருமானம் 5 லட்சம் ரூபாய் என்றால், அவர் ஒரு கோடி ரூபாய்க்கு டேர்ம் பிளான் எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு ஆண்டு பிரீமியம் சுமார் 16,000 என்ற அளவில் இருக்கும். பாலிசி காலம் வரை நலமுடன் வாழ்பவருக்கு இது திரும்பக் கிடைக்காது என்றாலும், குடும்பத்துக்குப் பாதுகாப்புக் கொடுக்கும்.

● ஒருவரிடம் எந்த வயதில் எவ்வளவு சொத்து சேர்ந்திருக்க வேண்டும் என்பதற்கும் ஒரு விதிமுறை இருக்கிறது. ஒருவரின் வயதை அவரது ஆண்டு வருமானத்தால் பெருக்கினால் வரும் தொகை எவ்வளவோ, அதில் குறைந்தபட்சம் 20–ல் ஒரு பகுதியாவது இருக்க வேண்டும். உதாரணமாக, 40 வயதுடைய ஒருவரின் ஆண்டுச் சம்பளம் 10 லட்சம் ரூபாய் என்றால், இரண்டையும் பெருக்கினால் வருவது 4 கோடி ரூபாய். இதில் 20–ல் ஒரு பகுதி, அதாவது 20 லட்சம் ரூபாய் சொத்து அவர் சேர்த்திருக்க வேண்டும். இது இல்லாவிட்டால், முதலீட்டில் அவர் சரியாக இல்லை என அர்த்தம்.

● உங்கள் ஓய்வுக்காலத்தில் உங்களிடம் எவ்வளவு பணம் இருக்க வேண்டும். பணி ஓய்வுக்குப் பிறகு வாழ்க்கையை நடத்த, உங்களின் ஓராண்டுச் செலவு எவ்வளவோ, அதைப் போலக் குறைந்தபட்சம் 25 மடங்கு பணத்தைச் சேமித்துவைக்க வேண்டும். அப்போதுதான் அதிலிருந்து கிடைக்கும் வட்டி வருமானம், குடும்பத்தைச் சிரமமின்றி நடத்த உதவும். ●


RAMRAJ



# நிறைசெல்வம் நமக்கு நல்வரம்!

● நாம் அமைதியாக வாழ வேண்டும். வாழ்வில் வெற்றியும் பெற வேண்டும். அதற்கு என்னென்ன வேண்டும்? 'உடல்நலம், நீண்ட ஆயுள், நிறைவான செல்வம், உயர் புகழ், மெய்ஞ்ஞானம் ஆகியவற்றோடு ஓங்கி வாழ்வோம்' என்றேன்.

நீங்களே எண்ணிப் பாருங்கள்... உடல்நலம் வேண்டுமா, வேண்டாமா? பிறகு நீண்ட ஆயுள். நாம் எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும்; அறிவை அறிவதற்காகப் பிறந்து இருக்கின்றோம். வாழ்க்கையின் பெரும்காலம் அதற்கான பாதையில்தான் இருக்கின்றோம். அது நிறைவேற வேண்டும். ஆகவே, நீண்ட ஆயுள் வேண்டும். அடுத்தது, நிறை செல்வம். இந்த உலகத்தில் வாழும் வரை வசதிகள் வேண்டுமல்லவா? எல்லாம் நல்லபடியாக அமைய எண்ணுவதுதான் நிறைசெல்வம்.

'நான் செய்கிற செயல்கள் அனைத்தும், எல்லோருக்கும் நன்மை அளிக்கட்டும்' என்ற உயர் சிந்தனைதான் புகழில் இருக்கக்கூடியது. அந்தச் சிந்தனை இருப்பவர்களுக்கே புகழ் கிடைக்கும். கடைசியாக மெய்ஞ்ஞானம். நாம் எந்த நோக்கத்தோடு பிறந்தோமோ, அந்த நோக்கத்தை அடைவதற்கு மெய்ப்பொருள் விளக்கம் வேண்டும். இந்த ஐந்தையும்தான் 'உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க' என்று சொல்கிறேன்.

● சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் ஆகியவற்றால் என்ன ஆகும் என்றால், நம்மைச் சுற்றி இருக்கும் மக்களின் உயிரோடு ஊடுருவி நட்பை வளர்த்துக்கொள்ள முடியும். 'நாம் நம்முடைய செயலில் இவருக்கு என்ன நன்மை செய்ய முடியும்' என்று யோசிக்க வேண்டும். அதற்காக உங்களுடைய நன்மையை அல்லது இருப்பை அழித்துக்கொண்டு செய்ய வேண்டிய அவசியமே இல்லை. இருப்பதை வைத்துக்கொண்டு செய்தாலே போதும். நாம் ஒருவருக்கு ஒரு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தால், அதுவே நல்லபடியாக அமையும்.

நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதைத் தேர்ந்தெடுத்து, அப்படிச் செய்வதற்கு வேண்டிய ஆற்றலை வளர்த்துக்கொள்ளும்போது நிறை செல்வம் இருக்கிற மாதிரி நமது மனநிலை வளர்ந்துகொண்டே இருக்கும்.

● இயற்கை, சமுதாயம், தான்... ஆகிய மூன்றின் இணைப்பில் நடைபெறுவதே வாழ்க்கை. வாழ்க்கை

**அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**

வெற்றிமிக்கதாக அமைய வேண்டுமானால், நாம் இயற்கையையும், சமுதாயத்தையும் உணர்ந்து வாழ வேண்டும்; மதித்து நடக்க வேண்டும். அதோடு எந்தக் காரியத்துக்காக இந்தப் பிறவியை எடுத்து வந்தோம் என்ற நோக்கத்தையும் அறிந்துகொள்ள வேண்டும். அந்த உயரிய நோக்கத்துக்கு ஏற்றதாக, நம் வாழ்க்கைமுறை அமைய வேண்டும்.

அப்போதுதான் துன்பத்தைத் தோற்றுவித்துக்கொள்ளாமலும் வாழலாம்; தவறுதலாக நாம் தோற்றுவித்துக்கொள்ளும் துன்பங்களிலிருந்தும் மீண்டு கொள்ளலாம். பிறரால் தோன்றக்கூடிய துன்பங்களிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

● தனக்கும், பிறருக்கும் தற்காலத்திலும், பிற்காலத்திலும் துன்பம் வராத செயல்களைச் செய்ய வேண்டும். இயன்றவரையில் பிறருக்கு உதவ வேண்டும். இதுதான் வேதங்களும் புராணங்களும் சொல்லும் உபதேசங்களின் சாரம் ஆகும். நம்மால் இயன்றவரை பிறர் துன்பத்தைத் தீர்க்க உதவ வேண்டும். அதனால் நமக்குத் துன்பம் வந்துவிடாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தனக்கும் துன்பம் இல்லாது, பிறருக்கும் துன்பம் விளைவிக்காது வாழும் வாழ்க்கையே உயர்வானது. நமக்கு என்னென்ன தேவையோ, அப்படிப்பட்ட சூழ்நிலை இந்த வாழ்க்கையில் தானாகவே அமையும். இதற்காகக் கெஞ்சிக் கேட்டு ஒன்றும் நாம் பெற வேண்டியதே இல்லை. எந்த இடத்திலே, எந்தக் காலத்திலே, எந்த நோக்கத்தோடு, எந்தச் செயலை எவ்வளவு திறமையாகச் செய்கிறோமோ... அதற்குத் தகுந்தவாறே விளைவும் வரும்; வெற்றியும் வரும்.

● வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சி நிலவ வேண்டும். அதற்கு ஏமாற்றமில்லாமல் வாழ வேண்டும். பேராசை, அறியாமை, தப்புக் கணக்கு, விழிப்பின்மை, பகை, இயற்கைச் சீற்றம் ஆகிய ஆறு வகைகளில் ஏமாற்றங்கள் வருகின்றன. ஏமாற்றத்தின் அளவுக்கேற்ப அதிர்ச்சியும், துன்பமும் விளையும்.

பொதுவாக எல்லோரும் தங்கள் வாழ்வில் காணும் துன்பங்களுக்கு ஏமாற்றமே காரணமாக இருக்கிறது. ஏமாற்றத்தைத் தவிர்க்கக்கூடிய சிந்தனையும், அந்தச் சிந்தனையால் கிடைக்கும் விளக்கத்தைச் செயலுக்குக் கொண்டு வருகிற அறிவு மேன்மையும் நமக்கு வேண்டும். சிந்தனையோடு ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். அந்த முடிவைச் செயலுக்குக் கொண்டுவரும் திறமும், துணிச்சலும் வேண்டும். இத்தகைய சிந்தனையும், அதனால் ஏற்படும் விழிப்புணர்வும், அதன் பாதையில் அமைந்த வாழ்க்கை முறையும், வெற்றியையும் அமைதியையும் தரும்.

● ஆசைகளை ஒவ்வொன்றாக எடுத்துச் செயலாக்கத் திட்டமிட வேண்டும். அவற்றை வரிசைப்படுத்த வேண்டும். ஒரு நேரத்தில் ஒன்றில் மட்டும் கவனம் செலுத்தினால், எதையும் சாதிக்கலாம். நிறைவேற்ற முடியாத நூறு ஆசைக் குப்பைகளை மனதில் சேர்த்து வைத்துக்கொண்டு திணறுவதில் என்ன லாபம்? மன அமைதி, மனதின் பலம், செயல்திறன், நற்குணங்கள் எல்லாம் போய்விடும்.

இதையெல்லாம் மாற்ற செயல்திட்டம் உதவும். இந்தத் தற்சோதனை வெற்றி அடைந்த பின், மனம் கலகலப்பாக இருக்கும். தைரியம் பிறக்கும். எதையும் சாதித்துவிடலாம் என்ற உற்சாகம் பெருகும். மனம் விசாலமடைவதால், பொறுமை, அன்பு என்ற பல நற்குணங்கள் மிகுந்து இருக்கும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். ●

RAMRAJ காட்டன் இந்தியாவின் கலாச்சாரம்

# வெண்மை

VENMAII

தமிழ் மாத இதழ்

மலர் 9 இதழ் 4

அக்டோபர் 2024

பதிப்பாளர் - கௌரவ ஆசிரியர்

**கே.ஆர்.நாகராஜன்**

ஆசிரியர்

**த.செ.ஞானவேல்**

இதழாசிரியர்

**வள்ளி**

வடிவமைப்பு

**உதயா**

புத்தக ஆக்கமும் வடிவமைப்பும்:
தரு மீடியா (பி) லிட்.,
10/55, ராஜ் தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை - 600 033
email: contacttharu@gmail.com

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

Published by
K.R. NAGARAJAN,
Published from
10, Sengunthapuram
Mangalam Road,
TIRUPUR - 641 604.
Ph: 9842274137

## நிறைசெல்வம் தரும் நான்கு மகிழ்ச்சிகள்!

'நம்மிடம் போதுமான பணம் இருக்கிறது' என்ற நிறைவு நமக்கு மகிழ்ச்சி தரும். 'அவரைவிட என்னிடம் அதிகம் இல்லையே' என்ற ஒப்பீடு அந்த மகிழ்ச்சியைப் பறித்துவிடும். 'நிறைசெல்வம் நமக்கு நான்குவிதங்களில் மகிழ்ச்சியைத் தரும்' என்கிறார் புத்தர் பிரான்.

- 'நம்மிடம் போதுமான செல்வம் இருக்கிறது' என்பதால் கிடைக்கும் மகிழ்ச்சி முதலாவது! நாட்டிலேயே பெரிய கோடீஸ்வரருக்குத்தான் இந்த மகிழ்ச்சி கிடைக்கும் என்பதில்லை. போதும் என்ற மனம் கொண்ட எவரும் நிறைவுடன் இதை அனுபவிக்கலாம்.
- 'நேர்மையாக நான் சம்பாதித்தேன்' என்பதால் கிடைக்கும் மகிழ்ச்சி இரண்டாவது! பிறருக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் தொழில் செய்யாமல், குறுக்கு வழியில் போகாமல், யாரையும் ஏமாற்றாமல் நேர்வழியில் செல்வம் சேர்த்தால் இந்த நிறைவு கிடைக்கும்.
- 'கழுத்தை நெரிக்கும் கடன்கள் இல்லாமல் நிம்மதியாக இருக்கிறேன்' என்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி மூன்றாவது! கலக்கம் தீர்த்து நிறைவு தரும் விஷயம் அல்லவா இது!
- 'பிறருக்கு உதவும் அளவுக்கு உயர்வான நிலையில் நம்மை இறைவன் வைத்திருக்கிறார்' என்பதில் கிடைக்கும் மகிழ்ச்சி நான்காவது! நம்மால் இயன்ற உதவிகளை அடுத்தவர்களுக்குச் செய்யும்போது கிடைப்பது பூரண நிறைவு.





## வெற்றியாளர்களின் பணப் பழக்கங்கள்!

வெற்றிகரமான மனிதர்கள் பண விஷயத்தில் எப்படிப்பட்ட பழக்கங்களை வைத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து பின்பற்றினால் நம் எதிர்காலம் சிறக்கும். அந்தப் பழக்கங்கள்:

- அவர்கள் ஒரே இடத்திலோ, ஒரே துறையிலோ முதலீடு செய்வதில்லை. பணத்தைப் பிரித்துப் பிரித்து வெவ்வேறு இடங்களில் போடுகிறார்கள். ஃபிக்சட் டெபாசிட், நிலம், தங்கம், பங்குச்சந்தை என்று பிரித்து முதலீடு செய்தால் பணம் பெருகும்.
- அதிக வட்டி கட்ட வேண்டிய மோசமான கடன்களை அவர்கள் வாங்குவதில்லை. தங்கள் பணம் வீணாக வட்டிக்குச் செலவாவதை அவர்கள் தடுத்துவிடுகிறார்கள்.
- தங்களுக்கும் தங்கள் பொருட்களுக்கும் கவனமாகக் காப்பீடு செய்வதன் மூலம், எதிர்காலப் பிரச்னைகளை அவர்கள் தவிர்த்துவிடுகிறார்கள்.
- ஒவ்வொன்றுக்கும் பட்ஜெட் போட்டு அவர்கள் திட்டமிடுகிறார்கள். அந்தத் திட்டத்துக்கு ஏற்றபடி பணத்தைத் திரட்டுகிறார்கள்.
- பண விஷயத்தில் அவர்கள் எந்த முடிவையும் தள்ளிப் போடுவதில்லை. அப்படித் தள்ளிப் போட்டால் இழப்பும் பிரச்னைகளும் ஏற்படும் என்பதால், முடிவை உடனே செயல்படுத்தி விடுகிறார்கள்.
- பண இழப்பையும், ஏமாற்றத்தையும் தவிர்ப்பதற்காக அவர்கள் கவனமாகச் செயல்படுகிறார்கள். பணத்தைப் பாதுகாப்பதில் மிகுந்த எச்சரிக்கை காட்டுகிறார்கள்.
- அதிக வட்டி, அதிக லாபம், சீக்கிரமே பணத்தைப் பெருக்குவது போன்ற கவர்ச்சிகரமான ஏமாற்று வலைகள் எதிலும் அவர்கள் விழுவதில்லை.



## காத்திருப்பதில் அர்த்தமில்லை!

கல்லூரிப் படிப்பு முடித்த மகன் தனக்கான வேலைவாய்ப்பைத் தேடாமல், நண்பர்களுடன் ஊர் சுற்றுவது, எப்போதும் கம்ப்யூட்டரில் சினிமா பார்ப்பது, சோஷியல் மீடியாவில் பொழுதுபோக்குவது என்று இருந்தான். பல நாட்கள் பொறுமையுடன் இருந்த அப்பா, ஒருநாள் அவனை அழைத்தார். "குழந்தைக்குத்தான் பசி என்று அழுதால் உடனே பால் கொண்டுபோய் கொடுப்பார்கள். நீ வளர்ந்துவிட்டாய். எதுவுமே உன்னைத் தேடி வராது. உனக்கான வாய்ப்புகளை நீதான் தேடிப் போக வேண்டும்" என்றார்.

அந்த நேரத்தில் கோபம் எழுந்தாலும், மனதுக்குள் அப்பாவைத் திட்டினாலும், மகன் ரோஷத்துடன் வேலை தேடினான். தட்டுத் தடுமாறி ஏதேதோ வேலைகள் செய்து இரண்டு ஆண்டுகளில் ஒரு நல்ல நிறுவனத்தில் பொறுப்பான வேலையில் அமர்ந்துவிட்டான். அந்த வேலை தனக்குச் சமூகத்தில் கொடுத்த மதிப்பை உணர்ந்தபோதுதான் அவனுக்கு அப்பா கொடுத்த அறிவுரையின் அருமை புரிந்தது.

யாரோ நம் பிரச்னைகளைத் தீர்த்து வைப்பார்கள், யாரோ நமக்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவார்கள் என்று வெறுமனே காத்திருப்பதில் அர்த்தமில்லை. நமக்குத் தேவையானதை நாம்தான் தேடி அடைய வேண்டும்.

## மீண்டும் வேண்டும்!



ஆதவ் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். அவன் பிறந்தநாளுக்கு அப்பா ரொம்பவே ஸ்டைலான ஸ்மார்ட் வாட்ச் ஒன்றை அவனுக்கு வாங்கிக் கொடுத்தார். ஆதவ் சந்தோஷமாக நண்பர்கள் எல்லோரிடமும் காட்டினான். ஒரே வாரத்துக்குள் ஒருநாள் பள்ளியில் விளையாடும்போது அவன் கீழே விழுந்ததில் வாட்ச் உடைந்துவிட்டது.

பயத்துடன் வந்து அப்பாவிடம் சொன்னான் ஆதவ். அப்பா அவனைத் திட்டவில்லை. "பரவாயில்லை, வேற புது வாட்ச் வாங்கிக்கலாம்" என்றார் அப்பா. அவனால் நம்பவே முடியவில்லை. அதன்பின் அப்பா நிபந்தனைகள் விதித்தார். "உடனே இன்னைக்கே வேறொரு வாட்ச் வாங்கித் தர மாட்டேன். உனக்கு அப்பப்போ சின்னச் சின்ன வேலைகள் சொல்வேன். அதையெல்லாம் செய்து முடித்தால் பணம் தருவேன். அதை சேர்த்து வை. போதுமான பணம் சேர்ந்ததும் நாம கடைக்குப் போய் வாட்ச் வாங்கலாம்" என்றார்.

வார விடுமுறை நாட்களில் தோட்ட வேலை செய்வது, வீட்டைச் சுத்தம் செய்வது, மொட்டை மாடியைப் பெருக்குவது, படுக்கை விரிப்புகளை அம்மா துவைத்ததும் மாடியில் காயவைத்து எடுத்து வந்து மீண்டும் படுக்கையில் அவற்றை விரிப்பது என்று நிறைய வேலைகளை ஆர்வமாகச் செய்தான். அப்பா தரும் பணத்தை உண்டியலில் சேமித்தான். ஒருவழியாக அவன் பணம் சேர்த்து புது வாட்ச் வாங்க ஐந்து மாதங்கள் ஆனது.

ஆனால், இந்த இடைவெளியில் அவன் வீட்டு வேலைகளை நன்கு அறிந்தான், ஒழுக்கம் கைகூடியது, சேமிப்பின் அருமையை உணர்ந்தான், பணத்தின் மதிப்பையும் அறிந்துகொண்டான். வாட்ச் மீண்டும் கிடைத்ததைவிட, இந்தப் பாடங்கள் அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தன. இந்த வாட்ச்சை அவன் கவனமாகப் பார்த்துக்கொள்வான்.



# பாதுகாப்பு தரும் பண விதிகள்!


- மாதத்தின் எல்லா நாட்களிலும் ஒரே மாதிரி இருங்கள். சம்பளம் வந்ததும், மாதத்தின் முதல் வாரத்திலேயே நிறைய செலவழித்து விடாதீர்கள். மாதக் கடைசிக்காகக் கையிருப்பு வைத்திருங்கள்.
- முதன்முதலில் சம்பாதிக்க ஆரம்பிக்கும்போதே சேமிப்பைத் தொடங்கிவிடுங்கள். எதிர்காலத் தேவைகளை இளம்வயதிலேயே உணர்வது நல்லது.
- பர்சனல் லோன், வீட்டுக் கடன், வாகனக் கடன் என்று கிடைக்கும் கடன்களை எல்லாம் வாங்கி, மாதத் தவணைகளுக்குள் சிக்கிக்கொள்ளாதீர்கள். உங்கள் கையில் வரும் வருமானத்தில் 40 சதவிகிதத்துக்குள்தான் உங்களின் மாதாந்திரக் கடன் தவணைகள் இருக்க வேண்டும்.
- ஒரு கிரெடிட் கார்டுக்கு மேல் வாங்கிவைத்திருக்காதீர்கள். என்னதான் கிரெடிட் கார்டில் பொருட்களை வாங்கினாலும், சில நாட்கள் கழித்து அதற்கான பணத்தை நீங்கள்தான் கொடுக்க வேண்டும் என்பது எப்போதும் நினைவில் இருக்கட்டும்.
- கிரெடிட் கார்டுக்கு குறைந்தபட்சத் தொகையும் செலுத்தலாம், முழுத் தொகையும் செலுத்தலாம். கையில் பணம் இருந்தால், முழுத் தொகையும் செலுத்திவிடுங்கள். இல்லாவிட்டால், நிறைய வட்டி கட்ட வேண்டியிருக்கும்.
- ‘பர்சனல் லோன் உங்களுக்கு உடனே தருகிறோம். வாங்கிக் கொள்கிறீர்களா?’ என்று கேட்டு அடிக்கடி தொலைபேசி அழைப்பு வரும். தவிர்க்கவே முடியாத தேவை இருந்தால் தவிர, இதற்கு இணங்கிவிடாதீர்கள். மற்ற கடன்களைவிட இதற்கு வட்டி அதிகம்.
- பென்ஷன் திட்டங்கள், வருங்கால வைப்புநிதி போன்றவை எல்லாமே ஓய்வுக்காலத்துக்கான சேமிப்புகள். ‘இடையில் சில காரணங்களுக்காக இதிலிருந்து பணம் எடுக்கலாம்’ என்று விதி இருக்கிறது. என்றாலும், இதில் கைவைக்காதீர்கள்.
- வீடு, மனை என்று வாங்கும்போது, அந்த நிறுவனத்தினர் கூட்டிச் செல்லும் வாகனத்தில் போகாதீர்கள். தனியாகப் போய் அந்தப் பகுதி பற்றி முதலில் நன்கு விசாரித்துக்கொள்ளுங்கள். தவறான முடிவெடுத்துவிட்டால், பிறகு திருத்திக்கொள்ள வாய்ப்பு இருக்காது.
- வருமானம் அதிகரிக்கும்போது செலவையோ, வாழ்க்கைமுறையையோ உயர்த்திக்கொள்ளாதீர்கள். சேமிப்பை உயர்த்துங்கள். வருமானம் குறையும்போது முதலில் சிக்கனத்துக்கு மாறுங்கள். தவிர்க்க இயலாத சூழலில் மட்டுமே சேமிப்பைக் குறையுங்கள்.
- சிலர் மாதச் சம்பளம் தரும் பாதுகாப்பான வேலையைத் துறந்துவிட்டுச் சொந்தத் தொழிலில் இறங்குவார்கள். சிலர் தொழிலைக் கைவிட்டு வேலைக்குப் போக முடிவு செய்வார்கள். இதுபோன்ற முடிவுகளை நீண்ட யோசனைக்குப் பிறகே எடுங்கள்.
- நண்பர்களுக்கு பார்ட்டி தருவது, உறவினர்களுக்குப் பரிசுகள் தருவது போன்ற விஷயங்களில் வீண் ஆடம்பரங்கள் வேண்டாம்.
- திருமண வயது வந்துவிட்டது என்பதற்காகத் திருமணம் செய்துகொள்வது சரியான முடிவு அல்ல. குடும்பத்தை நடத்தும் அளவுக்கு நிலையான வருமானமும், பொருளாதார சக்தியும் இருக்கிறது என்பவையே திருமணத்துக்கு அடிப்படைத் தகுதிகள்.
- ‘கடன் அன்பை முறிக்கும்’ என்பது ஆழ்ந்த அனுபவங்களின் வெளிப்பாடாக வந்த வாசகம். நெருங்கிய உறவுகள் மற்றும் நண்பர்களுக்குள் கடன் கொடுக்கல் வாங்கல் வேண்டாம். நாணயமானவர்களுடன் மட்டுமே பணப் பரிவர்த்தனை செய்யுங்கள். மனநிம்மதியை இழக்க மாட்டீர்கள். ●




Power of Trust
India's Most Trusted Dhoti Brand
RAMRAJ ©
LITTLE STARS ®
KIDS DHOTIS • SHIRTS
SCAN QR CODE FOR STORE LOCATION
Shop Online @ www.ramrajcotton.in


RAMRAJ
PRESTIGE WHITE FABRICS
SCAN QR CODE FOR
STORE LOCATION


Power of Trust
India's Most Trusted Dhoti Brand
RAMRAJ
CULTURE CLUB®
MATCHING DHOTIS ● SHIRTS
SCAN QR CODE FOR STORE LOCATION
Shop Online @ www.ramrajcotton.in


Power of Trust
India's Most Trusted
Dhoti Brand
RAMRAJ
Vaibhav Collection®
DHOTIS • SHIRTS
Elevate elegance
every time from
the roots
Shop Online @ www.ramrajcotton.in

## உங்கள் வீட்டுக்கே வர வேண்டுமா?

# வெண்மை

## சந்தாதாரர் ஆகுங்கள்!



'உயர்ந்த எண்ணங்கள் உலகம் முழுவதும் சென்றடைய வேண்டும்' என்ற உயரிய நோக்கில் மதிப்புமிக்க படைப்புகளைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறது வெண்மை. இந்த மாத இதழ் ஒவ்வொரு குடும்பத்திலும் பாதுகாக்கப்படும் பொக்கிஷமாகத் திகழ்கிறது.

**ஓர் ஆண்டு சந்தா ரூ.200**

**இரண்டு ஆண்டுகள் சந்தா ரூ.380**

காசோலை/வரைவோலை மூலம் அனுப்பலாம். **VENMAII** என்ற பெயரில் செக்/டி.டி. அனுப்பவும். பின்புறம் உங்கள் பெயர், ஊர் எழுதவும்.

அல்லது

VENMAII என்ற வங்கிக் கணக்கில் (A/C No:1809135000000299 Karur Vysya Bank, Tirupur SR Nagar Branch - IFSC: KVBL0001809) பணம் செலுத்தி, அதன் ஒப்புகை பிரதியை படிவத்துடன் அனுப்பி வைக்கலாம்.

➲ மணியார்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

➲ அனைத்து ராம்ராஜ் ஷோரூம்களிலும் சந்தா செலுத்தலாம்.

**வெண்மை**
ராம்ராஜ் வி டவர்,
10, செங்குந்தபுரம், மங்கலம் ரோடு,
திருப்பூர் - 641 604.
email: venmaii@ramrajcotton.net

சந்தா செலுத்தவும், மொத்தமாக வெண்மை இதழ்களைப் பெறவும் தொடர்புகொள்ளுங்கள்.
போன்:
0421-4304106, 98422 74137

## ஒரே நிமிடத்தில் வெண்மை சந்தாதாரர் ஆகலாம்!

உங்கள் சந்தாவை PhonePe G Pay Net transfer மூலம் செலுத்துங்கள்.

UPI பரிவர்த்தனை மூலமும் மொபைல் போன் மூலம் வெண்மை வங்கிக் கணக்கில் சந்தா தொகையை செலுத்தலாம். வெண்மை UPI id: kvbupiqr.75626@kvb

Bharat QR code வசதியுள்ள மொபைல் பேங்கிங் ஆப் வைத்துள்ளவர்கள், அதில் இங்கே உள்ள வெண்மை வங்கிக் கணக்கின் QR code -ஐ ஸ்கேன் செய்து சந்தா செலுத்தலாம்.

பணம் செலுத்தப்பட்டதற்கான வங்கித் தகவலை Forward செய்யுங்கள். கூடவே உங்கள் முழு முகவரியையும் அலைபேசி எண்ணுடன் வாட்ஸ்அப் செய்யுங்கள். அலைபேசி எண்: 98422 74137.

**வங்கிக் கணக்கு விவரம்: Venmaii**
**A/C No: 1809135000000299**
**Karur Vysya Bank,Tirupur SR Nagar Branch**
**IFSC Code: KVBL0001809.**

## மாணவ/ மாணவியர் சிறப்பு சலுகை



**(6ம் வகுப்புக்கு மேல் படிக்கும் மாணவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். சந்தா செலுத்தும்போது, மாணவர் அடையாள அட்டை நகலை இணைத்து அனுப்பவும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

## சீனியர் சிட்டிசன் சிறப்புச் சலுகை




**(60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இந்த சலுகை பொருந்தும். பிறந்த தேதிக்கான ஆதாரச் சான்று நகலை இணைத்து அனுப்ப வேண்டும்.)**

| ஒரு வருட சந்தா: | 2 வருட சந்தா: |
|---|---|
| ரூ.~~200~~ ரூ.125 மட்டும். | ரூ.~~380~~ ரூ.250 மட்டும். |

ராம்ராஜ் ஷோரூம்களில் ரூ.10,000க்கு மேல் பொருட்கள் வாங்குபவர்களுக்கு

**ஒரு வருட சந்தா பரிசாக வழங்கப்படும்**



# கவனிக்க வேண்டிய கடன் விதிகள்!

அம்மாவிடம் ஓடிவந்த மகள் மூச்சு வாங்கியபடி சொன்னாள். “அம்மா, நீ பேங்க்ல கடன் வாங்கப் போறியாமே... அதை வாங்காதே!” என்றாள். “ஏன்?” என்று கேட்டார் அம்மா.

‘‘கடன் வாங்கறது ஆபத்துதானே! அது நம்மைக் கஷ்டத்துல தள்ளிடும். கடன் கொடுக்கிற பேங்க்காரங்க ஜாலியா ஏ.சி ரூம்ல உக்கார்ந்து வட்டியும் முதலும் சம்பாதிக்கறாங்க. நம்ம பணத்தையெல்லாம் பிடுங்கிக்குவாங்க” என்றாள் மகள்.

அம்மா நிதானமாக மகளிடம் விளக்கினார். “இல்லம்மா, நான் டெய்லரிங் பிசினஸ் பண்றேன். இப்ப நிறைய ஆர்டர் வருது. இன்னும் ஏழெட்டு மெஷின்களை வாங்கிப் போட்டு தொழிலை விரிவுபடுத்தலாம்னு இருக்கேன். பெரிய இடம் வாடகைக்கு எடுக்கணும், மெஷின் வாங்கணும். இதுக்கெல்லாம் நம்மகிட்ட பணம் இல்லைன்னுதானே கடன் வாங்கறோம். சொல்லப் போனா இந்தக் கடன் என்பது நாம வளர்றதுக்கு பேங்க் கொடுக்கற ஒரு வாய்ப்பு. புரியுதா?”

“ஆனா, அதுக்கு அவங்க ஏன் வட்டி வாங்கணும்?”

“கடையில போய் எல்லாத்தையும் காசு கொடுத்துதானே வாங்கறோம். எதுவுமே சும்மா கிடைக்காதும்மா. மத்தவங்க சேமிச்சு வைக்கற பணத்தை பேங்க் நமக்கு தருது. நம்மகிட்ட வட்டி வாங்கிதான் சேமிச்சவங்களுக்கு வட்டி கொடுப்பாங்க. இது ஒரு தொழில். புரியுதா?”

‘‘ஆனா, கடன் வாங்கறது தப்புன்னு எல்லாருமே சொல்றாங்களே?”

“கடன் எதுக்கு வாங்கறோம்னு பார்க்கணும். நாம முன்னேற கடன் வாங்குறது தப்பில்ல. ஆடம்பரச் செலவுக்குக் கடன் வாங்கறது தப்பு!” என்று அம்மா விளக்கியபோது மகளுக்குப் புரிந்தது.

நாடுகளே கடன் வாங்கும்போது, வீடுகள் கடன் இல்லாமல் இயங்குவதில்லை. தினம் தினம் வரும் செல்போன் அழைப்புகள், ‘கிரெடிட் கார்டு வேண்டுமா’, ‘பர்சனல் லோன் வேண்டுமா?’ என தூண்டில் வீசுகின்றன. கவனமாக இருப்பவர்கள், இந்தக் கடன் வசதிகளை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக்கொள்கிறார்கள். தவறுபவர்கள், மீளாத கடன் படுகுழியில் விழுகிறார்கள். கடன் வாங்கும் விஷயத்தில் எப்படி இருக்க வேண்டும்? இதோ சில விதிகள்:

- உங்களால் திருப்பிச் செலுத்த முடிகிற அளவுக்கே கடன் வாங்குங்கள். உங்கள் மாத வருமானத்தில், கடன்களுக்குத் திருப்பிச் செலுத்துகிற மாதத் தவணை எவ்வளவு என கணக்கிடுங்கள். வருமானத்தில் 50 சதவிகிதத்துக்கு மேல் கடனுக்கே தவணை கட்டுகிறீர்கள் என்றால், நீங்கள் குடும்பம் நடத்த மூச்சுத் திணறுவீர்கள்.
- எந்தக் கடன் வாங்கினாலும், அதைத் திருப்பிச் செலுத்துகிற தவணைக் காலம் குறைவாக இருப்பது போல பார்த்துக்கொள்ளுங்கள். வீடு கட்ட கடன் வாங்குகிறீர்கள். அதை 15 ஆண்டுகளுக்கு பதிலாக 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்துவதாக இருந்தால், மாதத் தவணை குறைவாக இருக்கும். ஆனால், நிறைய வட்டி கட்டுவீர்கள். ஆனால், 15 ஆண்டுகளில் கட்டி முடித்தால், மாதா மாதம் அதிகமாகத் தவணை கட்டுவது போல தெரியும். ஆனால், வட்டியாக உங்கள் பணம் பறிபோவது குறையும். விரைவில் கடனிலிருந்து மீள்வீர்கள்.

● எந்தக் கடனையும் திருப்பிச் செலுத்துவதில் ஓர் ஒழுங்கு இருக்கட்டும். கிரெடிட் கார்டுக்கு பணம் கட்டுவதாக இருந்தாலும், வீட்டுக் கடன் தவணை கட்டுவதாக இருந்தாலும், கட்ட வேண்டிய கடைசித் தேதியைத் தவறவிடாதீர்கள். தாமதம் செய்தாலோ, மாதத் தவணைகளைக் கட்டத் தவறினாலோ, உங்கள் கடன் மதிப்பீடு பாதிக்கப்படும். ஒவ்வொருவரும் வாங்கிய கடனை எப்படித் திருப்பிச் செலுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து அவர்களுக்கு மதிப்பெண் வழங்கப்படுகிறது. 'சிபில்' குறியீடு எனப்படும் இதைப் பார்த்தே வங்கிகள் கடன் வழங்குகின்றன. ஒருவரின் சிபில் குறியீடு குறைவாக இருந்தால், அவருக்கு எதிர்காலத்தில் தேவைப்படும் நேரத்தில் கடன் கிடைக்காமல் போய்விடும்.

● எதற்காகக் கடன் வாங்குகிறோம் என்பதில் கவனமாக இருங்கள். கடன் வாங்கி வீடு கட்டலாம், வீட்டு மனை வாங்கலாம். கல்விக்கடன் வாங்கிக் குழந்தைகளைப் படிக்க வைக்கலாம். கடன் வாங்கித் திருமணம் செய்யலாம். தொழில் அல்லது வியாபாரத் தேவைகளுக்காகக் கடன் வாங்கலாம். இதுபோன்ற




கடன்களில் நீங்கள் சொத்து சேர்க்கிறீர்கள். அல்லது குடும்பக் கடமைகளை நிறைவேற்றுகிறீர்கள். ஆனால், கடன் வாங்கிக் குடும்பத்துடன் வெளிநாட்டுச் சுற்றுலா செல்வது ஆடம்பரம்.

● எதிர்காலத்துக்காகச் சேமிப்பு மற்றும் முதலீடுகள் செய்வது அவசியம்தான். ஆனால், அதைக் கடன் வாங்கிச் செய்யாதீர்கள். சிலர் கடன் வாங்கி ஃபிக்சட் டெபாசிட்டில் பணம் போடுவார்கள். சிலர் பங்குச் சந்தையில் போடுவார்கள். கடனுக்குக் கட்டும் வட்டியைக் கணக்கிட்டால், ஃபிக்சட் டெபாசிட் பெரிதாக லாபம் தராது. பங்குச் சந்தையில் சறுக்கினால், போட்ட முதலீடே காணாமல் போய்விடும். இதெல்லாம் தவிர்க்க வேண்டிய கெட்ட பழக்கங்கள்.

● வீட்டுக் கடன், கார் கடன் எனப் பல லட்சங்களில் கடன் வாங்கும்போது, மறக்காமல் அந்தக் கடனுக்குச் ஒரு காப்பீடு செய்துகொள்ள வேண்டும். இது கூடுதல் செலவுதான். என்றாலும், கடன் வாங்கியவருக்குத் தவிர்க்க முடியாத துயரம் நேரும்போது தவணை கட்ட




வேண்டிய சுமையானது குடும்பத்தினர் தலையில் விழாது. அதை இன்சூரன்ஸ் நிறுவனம் பார்த்துக்கொள்ளும்.

● ஒரு வங்கியில் பெரிய கடன் வாங்கியிருப்பீர்கள். "அதைவிட எங்களிடம் வட்டி குறைவு. அந்தக் கடனை எங்களிடம் மாற்றிக்கொள்ளுங்கள்'' என்று ஆசை காட்டுவார்கள். ஆனால், இப்படி ஒரு வங்கியிருந்து கடனை இன்னொரு வங்கிக்கு மாற்றும்போது சிலர் அபராதக் கட்டணம் வசூலிப்பார்கள். அதையெல்லாம் தெளிவாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு மாற்றுங்கள்.

● எந்தக் கடன் வாங்கினாலும், அதுதொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் தெளிவாக அறிந்துகொள்ளுங்கள். குட்டி குட்டி எழுத்துகளில் இருக்கும் விதிகளைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் கடன் வாங்கினால், பின்னால் அவதிப்பட வேண்டியிருக்கும்.

● நிறைய கடன்கள் வாங்கியிருக்கிறீர்கள் என்றால், அதிக வட்டியை விழுங்கும் கடனை முதலில் சீக்கிரமாக அடைக்கப் பாருங்கள். அதை அடைப்பதற்குக் குறைந்த வட்டிக்கு வேறு கடன்கூட வாங்கலாம், தப்பில்லை. ஆனால், பர்சனல் லோன் போன்ற அதிக வட்டியுள்ள கடன்களை வாங்கி, குறைந்த வட்டியுள்ள வீட்டுக் கடனை அடைக்காதீர்கள்.

● ஓய்வுக் காலத்துக்காக எனச் செய்யும் சேமிப்பை எடுத்து வேறு செலவுகளைச் செய்யாதீர்கள். அதற்கு பதிலாகக் கடன் வாங்கிக்கொள்ளலாம், தப்பில்லை. ஏனெனில், ஓய்வுக்காலத்தில் உங்களால் கடன் வாங்க முடியாது. ●


RAMRAJ



# நிறைசெல்வம் தரும் நான்கு ஹார்மோன்கள்!

மருத்துவர்கள் ஒரு செய்தியை மறக்காமல் சொல்கிறார்கள். "மனிதர்கள் மனநிறைவாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு நான்கு ஹார்மோன்களே காரணம். ஒருவர் எப்படிப்பட்ட சூழலில் வாழ்ந்தாலும் சரி... இந்த ஹார்மோன்கள் போதுமான அளவில் சுரப்பதற்குத் தேவையான விஷயங்களைச் செய்தால் போதும். மகிழ்ச்சியும் மனநிறைவும் கிடைக்கும்."

அந்த நான்கு ஹார்மோன்கள்... எண்டோர்பின், டோபமைன், செரடோனின், ஆக்ஸிடோசின். வாயில் நுழையாத கஷ்டமான பெயர்களாக இருந்தாலும், இவை கிடைப்பதற்கு நாம் ரொம்பக் கஷ்டப்படத் தேவையில்லை.

● நாம் உடற்பயிற்சி செய்யும்போது நம் உடலில் எண்டோர்பின் ஹார்மோன் சுரக்கிறது. தினமும் அரை மணி நேரம் நடைப்பயிற்சி அல்லது உடற்பயிற்சி செய்தால், போதுமான அளவு எண்டோர்பின் கிடைக்கும். வாய்விட்டுச் சிரித்தாலும் அதிகமாக இது சுரக்கும். நகைச்சுவையான காட்சிகளைப் பார்ப்பதும், படிப்பதும் இதற்கு உதவும். மன அழுத்தம் மற்றும் உடல்வலிகளை மறக்கச் செய்யும் ஹார்மோன் இது.

● இரண்டாவது ஹார்மோன், டோபமைன். சின்ன வேலையோ, பெரிய செயலோ, ஒன்றை முடித்ததும் 'அப்பாடா' என்ற நிறைவு மனதில் கிடைக்கிறது அல்லவா? அப்போது இது சுரக்கிறது. 'இதை நீங்கள் நன்றாகச் செய்தீர்கள்' என்று யாராவது உங்களைப் பாராட்டும்போது உங்களுக்குள் நிறைய டோபமைன் சுரக்கிறது. விரும்பிய நகை வாங்கினால், பிடித்தமான உடை வாங்கினால், பண்டிகை நாளில் பாரம்பரிய வேட்டி அணிந்து வலம் வந்தால், நினைத்த எதையும் வாங்கினால்... இது சுரந்துகொண்டே இருக்கிறது.

எந்த வேலையையும் நிறைவாகச் செய்வதும், அடுத்தவர்களின் பாராட்டுகளைப் பெறுவதும், விரும்பிய பொருட்களை அடையும் அளவுக்கு வாழ்க்கையில் உயர்வதும் இந்த ஹார்மோனை எளிதாகச் சுரக்கச் செய்யும்.

● மூன்றாவது ஹார்மோன், செரடோனின். கருணையும் அன்பும் காட்டி மற்றவர்களுக்கு உதவும்போது இந்த ஹார்மோன் சுரக்கும். பணம் கொடுத்து உதவினால்தான் இது கிடைக்கும் என்பதில்லை. இருப்பவர்கள் பண உதவி செய்யலாம். இல்லாதவர்கள் வேறு வகைகளில்கூட உதவி செய்யலாம். முகவரி தேடி அலையும் ஒரு புது மனிதருக்கு வழிகாட்டுவதுகூட உதவிதான். பூங்காவில் ஆங்காங்கே இறைந்து கிடக்கும் குப்பைகளை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போடுவதுகூடச் சமூகத்துக்குச் செய்யும் உதவிதான். தெருவில் ஒரு மரம் நடுவதும் உதவிதான். தன்னலம் இல்லாமல் சமூகத்துக்கோ, இயற்கைக்கோ நற்செயல் ஒன்றைச் செய்யும்போது இது அதிகமாகச் சுரக்கிறது.

● நான்காவது ஹார்மோன், ஆக்ஸிடோசின். பிற மனிதர்களுடன் நெருக்கம் காட்டும்போது இது சுரக்கிறது. ஒரு குழந்தையைத் தூக்கிக் கொஞ்சும்போது, நீண்ட நாள் கழித்துச் சந்திக்கும் ஒரு நண்பரை அரவணைக்கும்போது, துன்பத்தில் தவிக்கும் உறவினர் ஒருவருக்குத் தோள் தட்டி ஆறுதல் சொல்லும்போது, புது மனிதருடன் கைகுலுக்கி அறிமுகம் செய்துகொள்ளும்போது, இது சுரக்கிறது.

எனவே, நிறைசெல்வத்துடன் வாழ நான்கு விஷயங்களைச் செய்யுங்கள். தினசரி உடற்பயிற்சி, நிறைவான உழைப்பு, அன்பான சேவை, அரவணைப்பான உறவு. ●

# யார் ஏழை... யார் பணக்காரர்?

உலகின் முதல் வரிசைப் பணக்காரர்களில் ஒருவர் எலான் மஸ்க். முதலீடு தொடர்பான நிகழ்ச்சி ஒன்றில் அவரிடம் ஒருவர், "உலகின் பெரும் பணக்காரரான நீங்கள், ஓர் ஏழையை உங்கள் மகள் திருமணம் செய்துகொள்ள விரும்பினால் ஒப்புக்கொள்வீர்களா?" என்று கேட்டார். எலான் மஸ்க் அதற்குச் சிரித்தபடி பதில் சொன்னார். 'யார் ஏழை... யார் பணக்காரர்' என்பதை எல்லோருக்கும் புரிய வைக்கிற அற்புதமான அந்தப் பதில் இங்கே...

''தன்னிடம் நிறைய பணம் வைத்திருப்பவர் பணக்காரர் இல்லை. தன் முயற்சியால் செல்வத்தை உருவாக்க முடிகிறவரே பணக்காரர். மற்றவர்களிடம் பணம் இருந்தாலும், அவர்கள் ஏழைதான்! உதாரணமாக, ஒருவருக்கு லாட்டரிச்சீட்டில் பல கோடி ரூபாய் பரிசு விழுகிறது. ஒரே இரவில் அவர் கையில் ஏராளமான பணம் வந்து சேர்கிறது. ஆனாலும், அவர் ஏழைதான். ஏனென்றால், செல்வத்தை உருவாக்குவது எப்படி என்று அவருக்குத் தெரியாது. அதனால்தான் லாட்டரியால் கோடீஸ்வரர்கள் ஆன 90% பேர், ஐந்தே ஆண்டுகளில் கையில் இருந்த மொத்தப் பணத்தையும் இழந்து நிற்கிறார்கள்.

இதே ஒரு செல்வந்தர் தன் கையில் ஒரு பைசாகூட இல்லாமல் இருக்கலாம். நிறைய பேர் அப்படி இருந்திருக்கிறார்கள். ஏதோ ஒரு தருணத்தில் தொழில் தவறாகிப்போய், தங்கள் முதலீட்டை இழந்து, பெரும் கடன் சுமையுடன் நின்றிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் பண விஷயத்தில் தங்களுக்கு இருக்கும் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்தி மீண்டுவந்து செல்வம் சேர்த்திருக்கிறார்கள். அந்தப் புத்திசாலித்தனமே அவர்களின் சொத்து.

கல்வி கற்று, ஏதோ ஒரு துறையில் தேர்ச்சி பெற்று, தொடர்ச்சியாகப் பயிற்சிகள் எடுத்து தன்னை மேம்படுத்திக்கொண்டே இருக்கும் ஒருவர் பணக்காரர் ஆகிவிடுவார். 'எனக்கு இருக்கும் எல்லாப் பிரச்னைகளுக்கும் அரசாங்கமே காரணம்' என்று விமர்சனம் செய்துகொண்டே மூலையில் முடங்கிக் கிடக்கும் ஒருவர் ஏழையாகவே இருப்பார்.

'இதைச் செய்தால் பிரகாசமான எதிர்காலம் கிடைக்கும்' என்ற ஏதோ ஒரு தகவல்... 'இந்தப் பயிற்சி எடுப்பது நல்ல வாய்ப்புகளைத் தரும்' என்ற வழிகாட்டல்... இதையெல்லாம் தேடுகிறவர்கள் பணக்காரர் ஆகிவிடுவார்கள். 'யாராவது எனக்குப் பணம் கொடுத்தால்தான் நான் முன்னேற முடியும்' என்று நினைப்பவர்கள் ஏழைகளாகவே இருப்பார்கள். இங்கு பணம் என்பது பிரச்னை இல்லை. பணத்தை உருவாக்கும் புத்திசாலித்தனமும் மனநிலையும் இருக்கிறதா என்பதே கேள்வி.

ஒரு வங்கியில் செக்யூரிட்டியாக இருக்கிறார் ஒருவர். ஒருநாள் வங்கியின் ஏ.டி.எம் மெஷினில் நிரப்ப வந்தபோது வாசலில் அதிகாரிகள் தவறுதலாக விட்டுச்சென்ற லட்சக்கணக்கான பணம் அவர் கண்ணில்படுகிறது. அதைப் பத்திரமாக எடுத்துச் சென்று மேனேஜரிடம் ஒப்படைக்கிறார் அவர். 'பிழைக்கத் தெரியாத மனிதர்' என்று மற்றவர்கள் அவரைச் சொல்லலாம். ஆனால், 'இது நம் பணம் இல்லை, நாம் எடுத்துக்கொள்ளக்கூடாது' என்ற எண்ணம் அவருக்கு இருக்கிறது. பணமே சேர்த்திருக்காவிட்டாலும் அவர் மிகப்பெரிய செல்வந்தர். எதிர்காலத்தில் வங்கியே அவருக்கு வேறு நல்ல வேலை கொடுக்கலாம். அந்த வேலையில் தன் திறமையைக் காட்டி அவர் உயரலாம். விரைவிலேயே நல்ல சம்பளம் வாங்கலாம். அது, அவர் தவறான வழியில் உரிமை கொண்டாட நினைக்காத வங்கிப் பணத்தைவிட மிக அதிகமாக இருக்கும்.

செல்வம் என்பது மனநிலைதான். அது இருப்பவர்களிடம் பணம் தானாக வந்து சேரும்!"




RAMRAJ






# அன்பாசிரியர் விருது விழாவில் ராம்ராஜ்!

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழக்கமான பாடம் கற்பிப்பதோடு நின்று விடாமல், மாணவர்கள் மீது பேரன்பும், அவர்களின் வளர்ச்சி குறித்த அக்கறையும் கொண்டு பணியாற்றும் ஆசிரியர்கள் பலர் உண்டு. அவர்களை கௌரவிக்கும் வகையில் 'இந்து தமிழ் திசை' நாளிதழுடன் இணைந்து, ராம்ராஜ் காட்டன் நிறுவனம் 2020-ம் ஆண்டு முதல் 'அன்பாசிரியர்' விருது வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு சென்னையில் நடைபெற்ற இவ்விழாவில், தமிழகப் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு, ஆசிரியர்களுக்கு விருதுகளை வழங்கினார். 'இந்து தமிழ் திசை' நாளிதழ் நிர்வாகிகள், ஆசிரியர் குழுவினர் பங்கேற்றனர். ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

திரு. கே.ஆர்.நாகராஜன் தனது வாழ்த்துரையில், "என்னை வளர்த்த ஆசிரியர்களுக்கெல்லாம் விருது கொடுக்க முடியாத ஒரு வாய்ப்பை இப்போது இப்படி உருவாக்கிக்கொண்டேன். அன்பாசிரியர் விருது பெறும் ஆசிரியர்கள், அவர்களின் குடும்பத்தினர் அனைவரும் எல்லாம் வல்ல இறையருளால் உடல்நலம், நீள் ஆயுள், நிறை செல்வம், உயர்புகழ், மெய்ஞானம் பெற்று ஓங்கி வாழ்க வளமுடன்" என்று வாழ்த்தினார்.

மாண்புமிகு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, விருதுபெற்ற ஆசிரியர்களையும், இந்த விருதுகளை 'இந்து தமிழ் திசை' நாளிதழுடன் இணைந்து வழங்கிவரும் ராம்ராஜ் காட்டன் நிறுவனத்தையும் வாழ்த்தினார். "நம்மை ஏற்றி விடுகின்ற ஏணியாக இருக்கும் ஆசிரியர்களையும், நாம் படித்த பள்ளிக்கூடங்களையும் என்றைக்கும் மறந்துவிடக் கூடாது" என்று குறிப்பிட்டார்.

# குஜராத் முதல்வருடன் சந்திப்பில் ராம்ராஜ்!

குஜராத் மாநில முதல்வர் மாண்புமிகு பூபேந்திர படேல் அவர்களை ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். குஜராத் மாநில தலைமைச் செயலகத்தில் உள்ள முதல்வரின் அலுவலகத்தில் நடந்த இந்த சந்திப்பின்போது, ராம்ராஜ் காட்டனின் பாரம்பரியப் பண்பாட்டுத் தயாரிப்பான வேட்டியை நினைவுப் பரிசாக முதல்வருக்கு வழங்கினார் திரு. கே.ஆர்.நாகராஜன். பல்லடம் உலக தென்னை உழவர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் செயலாளரான திரு. வே.சுந்தரராஜ் உடன் சென்றிருந்தார். அவர், தென்னையிலிருந்து தயாரிக்கப்பட்ட ஆரோக்கிய இயற்கை பானமான தென்னீராவை முதல்வருக்கு வழங்கினார். இந்த சந்திப்பின்போது, திருப்பூர் மாவட்ட குஜராத் சமாஜ் ஒருங்கிணைப்பாளர் திரு. சுரேஷ் குமார் உடன் இருந்தார்.




# மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் ராம்ராஜ்

கோவை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் ஐந்தாவது வருடாந்திரப் பொதுக்குழுக் கூட்டம் கோவையில் நடைபெற்றது. இதில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். இதைத் தொடர்ந்து, கடந்த 2023 – 24ம் கல்வியாண்டில் 10–ம் வகுப்பு மற்றும் 12–ம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும், பிற துறைகளில் தேசிய அளவில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பாராட்டு விழா நடைபெற்றது. திரு. கே.ஆர்.நாகராஜன் பரிசுகள் வழங்கிப் பாராட்டினார்.

“உங்களுடைய பெற்றோர்கள் பெரிய தியாகம் செய்து உங்களை இந்த அளவுக்குப் படிக்க வைத்திருக்கிறார்கள். நீங்கள் அனைவரும் மேற்படிப்பு சென்றுள்ளீர்கள். கவனம் சிதறுவதற்கு நூற்றுக்கணக்கான வழிகள் இருந்தாலும், கல்வியை மறக்காதீர்கள். ஒழுக்கத்துடன் உயர்கல்வி முடித்து பெரிய பொறுப்புகளில் அமர்ந்து சமூகத்திற்குத் தேவையான பொதுசேவைகளுக்கு உங்களை அர்ப்பணித்துக் கொள்ளுங்கள்” என்று அவர் வாழ்த்திப் பேசினார்.

நிகழ்ச்சியில் சங்கத்தின் தலைவர் திரு. டி.ராஜ்குமார், கௌரவத் தலைவர் திரு. ஏ.பாரி, ஐ.பி.எஸ் (ஓய்வு) மற்றும் முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.




## கர்ப்பகாலப் பயிற்சிக்கு பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்!

கர்ப்பகாலப் பயிற்சிக்கு பல்கலைக்கழகத்துடன் ஒப்பந்தம்!

திருப்பூரில் செயல்பட்டு வரும் வெற்றி டிரஸ்ட், கர்ப்பிணிப் பெண்களுக்கு ‘கர்ப்பக்ருபா’ எனும் பயிற்சியை வழங்கிவருகிறது. கர்ப்ப காலத்தை இனிய அனுபவமாக உணர்ந்து, ஆரோக்கியமான குழந்தையை சுகமான பிரசவச் சூழலில் பெற்றெடுக்க அனைத்து வழிகளையும் காட்டும் இனிமையான பயிற்சி இது. வெற்றி டிரஸ்ட் பணிகளில் ராம்ராஜ் காட்டன் நிறுவனர்

திரு. கே.ஆர்.நாகராஜன் அவர்கள் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

இந்த ‘கர்ப்பக்ருபா’ பயிற்சியை குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள சில்ட்ரன்ஸ் பல்கலைக்கழகத்தில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையொப்பமிடுவதற்கான முன்னேற்பாட்டு பணிகளுக்காக, ராம்ராஜ் காட்டன் நிறுவனர் திரு. கே.ஆர்.நாகராஜன், வனம் இந்தியா பவுண்டேஷன் செயலாளர் திரு. வே.சுந்தரராஜ் ஆகியோர் அகமதாபாத் சென்று பல்கலைக்கழக நிர்வாகிகளுடன் உரையாடினர்.



ஒருவரிடம் இருக்க வேண்டிய நிஜமான செல்வங்கள் எவை? இதுபற்றிய விவாதம் இரண்டு நண்பர்களுக்கிடையே வந்தது. இருவரும் ஒன்றாகக் கல்லூரியில் படித்தவர். ராம் தன் தந்தையின் தொழிலையே தொடர்ந்து செய்து, அதில் நல்ல வளர்ச்சி கண்டிருந்தார். கணேஷ் பகுதிநேர வேலைகள் நிறைய செய்தபடி எழுத்தாளராகவும் சில புத்தகங்கள் எழுதிப் புகழ்பெற்றிருந்தார்.

இருவரும் தங்கள் இன்னொரு நண்பரான சித்தார்த் தந்த விருந்து ஒன்றில் பங்கேற்றிருந்தனர். சித்தார்த்தும் மிக வசதியானவர்தான். விருந்து சாப்பிடும்போது கணேஷை ராம் சீண்டினார். "கணேஷ், இந்த விருந்துக்கு சித்தார்த் செய்யற செலவு அளவுக்குக்கூட நீ உன்னோட புத்தகங்கள்ல சம்பாதிச்சு இருக்கமாட்டே இல்லையா?" என்று கேட்டார்.

"ஆமாம், ஆனால் நீயோ, சித்தார்த்தோ வாழ்நாள் முழுக்கச் சம்பாதிக்க முடியாத ஒரு சொத்து என்கிட்ட இருக்கு" என்றார் கணேஷ். "இந்த உலகத்துல அப்படி ஒரு சொத்து இருக்கா, என்ன அது?" என்று ராம் கேட்டதும் கணேஷ் பதில் சொன்னார். "என்கிட்ட இருக்கறது எனக்குப் போதுமானதுன்னு எந்தச் சூழலிலும் கிடைக்கற மனநிறைவு!"

அது ராமுக்குப் புதிய பார்வையைக் கொடுத்தது. 'நம்மிடம் இருப்பது போதுமானது இல்லையே' என்ற பதற்றமும் பாதுகாப்பற்ற உணர்வும் எப்போதும் தன்னை மகிழ்ச்சியாக வாழ விடுவதில்லை என்பதை அவர் உணர்ந்தார். பணம் குறித்த கவலை நம் மனதை அரித்தால், நம்மால் உயர்வு பெறவே முடியாது. பண விஷயத்தில் நேர்மறையான உணர்வுடன் இருக்கச் சில வழிகள்:

- கடந்த காலத்தில் செய்த தவறுகளை நினைத்து வருந்தாதீர்கள். தேவையே இல்லாமல் வீண் பெருமைக்காக ஒரு பொருளை வாங்கியிருக்கலாம், உண்மையான விலையைவிட அதிக விலை கொடுத்து ஒரு வீட்டை வாங்கியிருக்கலாம், குறித்த தேதிக்குள் ஒரு கட்டணத்தைக் கட்ட மறந்து அபராதம் செலுத்தியிருக்கலாம். இப்படிப்பட்ட தவறுகள் எல்லாமே பலரும் செய்வதுதான். ஏனெனில், நிதி நிர்வாகம் என்பது ஒரு கடினமான பாடம். எல்லோருமே முறையாக அதைக் கற்றுக்கொண்டு வளர்வதில்லை. எனவே, உங்கள்

# நம்மிடம் இருக்கவேண்டிய நிறைசெல்வம்!



தவறுகளை மறந்துவிடுங்கள். அதே தவறைத் திரும்பச் செய்யாமல் இருங்கள்.

● கடன்களை மறக்காதீர்கள். ஒருவர் 50 லட்சம் ரூபாய் கடன் வாங்கி வீடு வாங்கியிருப்பார். ஆனால், அந்த வீட்டில் குடியேறியதும், சொந்த வீட்டில் வசிப்பதாக அவருக்குள் பெருமிதம் வந்துவிடும். அந்தக் கடன் முழுமையாக அடைந்தால் மட்டுமே அது சொந்த வீடு என்பது ஞாபகம் இருக்கட்டும். அந்த நினைப்புதான் கடனை அடைக்க உதவும். இடையில் ஏதாவது வருமானம் வந்தாலும், வீட்டுக்கடனை அடைப்பதற்கு அதை மொத்தமாகக் கொடுக்கத் தோன்றும்.

● பணம் குறித்த உங்கள் சிந்தனைகளைப் புரிந்துகொள்ளுங்கள். எப்படிப்பட்ட செலவுகளை நீங்கள் செய்கிறீர்கள் என்பதைக் கவனியுங்கள். நண்பர்களுடன் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு அதற்கு 5 ஆயிரம் ரூபாயைத் தயக்கமின்றிச் செலவழிக்கும் ஒருவர், தன் துறை தொடர்பான ஆன்லைன் கோர்ஸ் ஒன்றில் சேர்வதற்கு 2 ஆயிரம் ரூபாய் செலவிடத் தயக்கம் காட்டினால், அவரின் பணச்சிந்தனை தவறு என்று அர்த்தம். பயனுள்ள செலவுகளைத் தயக்கமின்றிச் செய்யுங்கள், மற்ற செலவுகளைக் கட்டுக்குள் வையுங்கள்.

● 'அவர் இந்த மாடல் கார் வாங்கிவிட்டார்', 'இவர் ஜாலியாக வெளிநாட்டுச் சுற்றுலா போயிருக்கிறார்' என்று மற்றவர்களுடன் ஒப்பிட ஆரம்பித்தால் உங்கள் நிம்மதி தொலைந்துபோகும். இந்த ஒப்பீடுகளுக்கு ஒரு முடிவே கிடையாது. ஒவ்வொருவரின் நிதிச்சூழலும் வேறு வேறு. பணம் தொடர்பாகத் தங்கள் சூழ்நிலையிலிருந்து மற்றவர்கள் எடுக்கும் முடிவுகள் சரியாகவும் இருக்கலாம், தவறாகவும் இருக்கலாம். அவர்களைப் பார்த்து சூடு போட்டுக்கொள்ளாதீர்கள். உங்கள் நிதிச்சூழலை வைத்தே முடிவுகள் எடுங்கள்.



● 'காருக்கு இவ்வளவு செலவு', 'வீட்டைப் பழுது பார்க்க அதிக செலவு', 'இந்த மாத பட்ஜெட் எகிறிவிட்டது' என்று எதிர்மறையான விஷயங்களையே மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளாதீர்கள். அது உங்களை அச்சத்தில் தள்ளிவிடும். அவசியம் செய்தே ஆக வேண்டிய செலவு ஒன்று இருக்கிறதா? அந்த நேரத்தில் அதைப் பிரச்னையாகப் பார்க்காதீர்கள். உங்களுக்குத் தேவை தீர்வு மட்டுமே! பணத்தை எப்படித் திரட்டுவது என்று மட்டும் யோசியுங்கள்.

● பட்ஜெட் போடுவது என்றால் பலருக்கும் டென்ஷன் ஆகிவிடும். வீட்டு பட்ஜெட்டைக் குடும்பத்தினர் எல்லோரையும் வைத்துக்கொண்டு போடுங்கள். எந்தச் செலவுகளைக் குறைக்கலாம், எது நியாயமான செலவு என்று கலந்து பேசி முடிவு செய்யுங்கள். உங்களால் சுலபமாகச் செலவுகளைக் குறைத்து, மகிழ்ச்சியான பட்ஜெட் ஒன்றைப் போட முடியும். அதில் சேமிப்புக்கும் கணிசமான இடம் இருக்கும்.

● பண விஷயத்தைப் பொறுத்தவரை நம் முன்பாக ஏராளமான வாய்ப்புகள் இருக்கும். ஒரு மாதத்தில் கூடுதலாக வருமானம் வருகிறதா? அதை ஆடம்பரமாகவும் செலவு செய்யலாம், வங்கிக்கணக்கிலும் சேமிக்கலாம், பங்குச்சந்தை போன்ற முதலீடுகளையும் செய்யலாம், அல்லது உங்களை மேம்படுத்திக்கொள்ளவும் செலவிடலாம். எதை நாம் தேர்வு செய்கிறோம் என்பது முக்கியம். சரியான தேர்வுகளை எப்போதும் செய்யும் மனநிலையைப் பெறுங்கள்.

● நிறைவான மனநிலை என்பது, 'இருப்பதே போதும்' என சம்பாதிப்பதை நிறுத்திவிடும் மனநிலை அல்ல! அந்த மனநிலை உங்களை முன்னேற விடாமல் செய்துவிடும். 'இந்தக் கணத்தில் நம்மிடம் இருப்பது நிறைவான செல்வம்' என்ற நினைப்புடன், அடுத்த இலக்குகளைத் தேடிப் போக வேண்டும். அந்த நினைப்பு இருந்தால், மன உளைச்சலோ குழப்பமோ இல்லாமல் வேலைகளைச் செய்ய முடியும்.

● நீங்கள் நினைத்த அளவுக்கு உங்களிடம் பணம் சேராமல் இருக்கலாம். ஆனால், இந்த நிமிடத்தில் உங்களிடம் இருக்கும் எல்லாவற்றுக்கும் நன்றியுடன் இருங்கள். உங்கள் உழைப்பால்தான் இந்த உயர்வான வாழ்க்கை கிடைத்திருக்கிறது. இதை அடைவதற்குப் பலர் உதவியிருக்கிறார்கள். அந்த மனிதர்களுக்கும், உங்களிடம் சேர்ந்திருக்கும் பணத்துக்கும் நன்றி சொல்லுங்கள். ●




# நிறைசெல்வம் நிரந்தரமாக இருக்க...


ஆரோக்கியமான உணவு சாப்பிட்டு, சரியான வாழ்க்கைமுறையைப் பின்பற்றி உடல்நலனை நன்றாக வைத்துக்கொள்பவர்கள் நிறைய பேர். சிக்கனச் செலவு, சேமிப்பு, முதலீடு, காப்பீடு எனப் பணநலன் சார்ந்து ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகள் இங்கே...

- உங்கள் பணத்தை நிர்வாகம் செய்வதற்கு என்று தனியாகக் கொஞ்ச நேரம் செலவிடுங்கள். வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு என்று கவனியுங்கள். கடன்கள் இல்லாமல் குடும்பத்தை நிர்வாகம் செய்ய முயற்சி எடுங்கள்.
- நீங்கள் சம்பாதிப்பதைவிட அதிகமாகச் செலவழிக்காதீர்கள். ஒவ்வொரு மாதமும் கடன் வாங்கிச் செலவழிக்கிறீர்கள் என்றால், நீங்கள் தப்பு செய்வதாக அர்த்தம்.
- பட்ஜெட் போட்டு வாழுங்கள். உங்கள் வருமானத்தையும் செலவுகளையும் எழுதிப் பாருங்கள். எது எதற்கு எவ்வளவு செலவாகிறது என்பது புரியும். அத்தியாவசியச் செலவுகளைக் குறைக்காதீர்கள். விலைவாசியைப் பொறுத்து ஒவ்வொரு மாதமும் இது சற்றே அதிகமாகலாம்; குறையலாம். அநாவசியச் செலவுகளைக் குறைக்க வழி தேடுங்கள்.
- உங்களிடம் பணம் குறைவாக இருந்தால், வீண் பெருமைக்காகவும் ஆடம்பரத்துக்காகவும் பணம் செலவழிக்காதீர்கள். அவசியமான தேவைகளுக்கு மட்டுமே செலவழியுங்கள்.
- அவசியமான செலவுகளுக்குத் தேவைப்படும் அளவுக்குப் பணம் இல்லாமல் தடுமாறும்போது, அந்தச் செலவுகளைக் குறைக்க நினைக்காதீர்கள். உங்கள் வருமானத்தை எப்படி அதிகரிக்கலாம் என்று யோசியுங்கள். உங்களால் வளர்ச்சி அடைய முடியும்.
- எந்த ஒரு பெரிய செலவையும் செய்வதற்கு முன்பு, ‘இந்தப் பணத்தைச் செலவழிக்கலாமா? அல்லது சேமிக்கலாமா?’ என்று மனதுக்குள் கேள்வி கேட்டுத் தெளிவான விடை தேடுங்கள்.
- இலக்கு வைத்துக்கொண்டு பணத்தைச் சேமியுங்கள். ‘வீடு வாங்குவதற்காக இன்னும் 10 ஆண்டுகள் சேமிக்க வேண்டும்’ என்று முடிவு செய்யும்போதுதான், ‘எவ்வளவு சேமிக்கலாம்’, ‘எங்கே வீடு வாங்கலாம்’ என்றெல்லாம் தீர்மானிக்க முடியும்.
- ஒருவர் வேலைக்குச் சேர்ந்த முதல் மாதத்திலிருந்தே சேமிப்பைத் தொடங்க வேண்டும். வியாபாரம், தொழில் என்று இருப்பவர்கள் 30 வயதுக்குள் தொடங்க வேண்டும். தாமதம் செய்தால், உங்கள் ஓய்வுக்காலம் இனிக்காது.
- எவ்வளவு சேமிக்கலாம் என்பது ஒவ்வொருவரின் சூழலைப் பொறுத்தது. 22 வயதில் ஒருவர் நல்ல வேலைக்குப் போகிறார் என்றால், அவருக்குக் கடன்கள் ஏதும் இல்லாமல் இருந்தால் தன் வருமானத்தில் 50 சதவிகிதம் வரை சேமிக்கலாம். திருமணத்துக்குப் பிறகு இது குறையும். குடும்பப் பொறுப்புகளை நிறைவேற்றிய பிறகு இதை மீண்டும் அதிகரிக்கலாம்.
- புதிதாக ஒரு வாகனம் வாங்கினாலோ, ஒரு சுற்றுலா போனாலோ பலரும் பெருமகிழ்ச்சி அடைவார்கள். ஒரு லட்சம் ரூபாய் எங்காவது முதலீடு செய்தால், அதைவிடப் பெரிதாக மகிழ்ச்சி அடையுங்கள். இந்த மனநிலை உங்களை நிறைசெல்வம் கொண்டவராக மாற்றும்.
- முதலீடு விஷயத்தில் அவசரப்படாதீர்கள். நீங்கள் செய்யும் ஒரு முதலீடு நன்கு வளர்வதற்குக் கொஞ்சம் காலம் எடுக்கலாம். அதுவரை அவகாசம் கொடுங்கள்.

# நிஜமான செல்வங்கள் எவை?

பெட்டி நிறைய பணம், பீரோ நிறைய நகை, வீடு, நிலங்கள் என்று மதிப்பான பொருட்களையே செல்வங்களாக நிறைய பேர் கருதுகிறார்கள். இவற்றைத் தாண்டி ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டிய நிஜமான செல்வங்கள் இவை:

- நேர்மறையான மனநிலையே எல்லாச் செல்வங்களுக்கும் அடிப்படை. அது ஒருவரிடம் இருந்தால், பிற செல்வங்கள் யாவும் தானாக வந்து சேரும். பிரச்னைகள், தவறுகள், பழிவாங்கல்கள், குழப்பங்கள், பொறாமை, பற்றாக்குறை என்று எதிர்மறை உணர்வுகளைத் தூக்கி வீசிவிட்டு வளம், வளர்ச்சி, அன்பு, ஆர்வம், மகிழ்ச்சி போன்ற நேர்மறை உணர்வுகளால் மனதை நிரப்புங்கள்.
- 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பார்கள். ஆரோக்கியமான உடலே, நிறைவான வாழ்வுக்கு அஸ்திவாரம். உடல்நலமும் மனவளமும் நன்றாக இருந்தால், உழைக்கத் தயங்க மாட்டோம். அதற்கு ஏற்றபடி உணவு மற்றும் உடற்பயிற்சியில் கவனம் செலுத்துங்கள்.
- இனிமையான குடும்பமும், அன்பான உறவுகளும், நேசிக்கும் நண்பர்களும் மிகச்சிறந்த செல்வங்கள். ஆதரிக்கவும், தோள் கொடுக்கவும், கைதூக்கி விடவும் அன்பான மனிதர்கள் இருக்கும்போது நிறைந்த செல்வத்தை ஒருவர் சேர்க்க முடியும்.
- மனிதர்களைப் புரிந்துகொள்ளும் பக்குவமும் ஒரு முக்கியமான பொக்கிஷம். பிறரின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள், கோபங்கள், ஏமாற்றங்கள் என்று எல்லாவற்றையும் புரிந்துகொள்ள வேண்டும். ஒருவர் வெளிப்படுத்தும் உணர்வுகளை, அந்த மனிதருக்கும் நமக்குமான உறவு நெருக்கத்தை வைத்துப் புரிந்துகொள்ள வேண்டும். அவசரப்பட்டுக் கோபத்தைக் காட்டிவிடக்கூடாது.
- அச்சமற்ற வாழ்வு என்பதும் மதிப்புமிக்க செல்வம். 'இந்த முயற்சியில் நாம் தோற்றுவிடுவோமோ', 'இதைப் பற்றி அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ', 'இவரிடம் உதவி கேட்டால் கிடைக்காமல் போய்விடுமோ' என்றெல்லாம் அச்சமின்றிச் சுதந்திரமாக வாழ வேண்டும்.
- எந்தத் துறையில் இருந்தாலும், அதில் திறமையை வளர்த்துக்கொண்டு, முன்னேற்றங்களை ஆர்வத்துடன் தெரிந்துகொண்டு, உயர்ந்த இடத்துக்குப் போவதும் ஒரு முக்கியமான செல்வம்.
- உங்களின் லட்சியக் கனவுகள் எதுவாக இருந்தாலும், அதை அடைவதற்கு முழுமையாக முயற்சி செய்ய உங்களால் இயல வேண்டும், அதற்கான வாய்ப்புகளும் அமைய வேண்டும், நீங்கள் எதிர்பார்க்கும் உதவிகளும் கிடைக்க வேண்டும். இந்த எல்லாம் சரியாக அமைந்தால், நீங்கள் நிறைசெல்வத்துடன் வாழ்கிறீர்கள் என அர்த்தம்.
- மிகவும் பிடித்தமான, நேசித்துச் செய்ய முடிகிற ஒரு வேலையோ, தொழிலோ ஒருவருக்கு அமைந்தால், அதைவிடச் சிறந்த செல்வம் எதுவும் இல்லை.
- வேலை, தொழில், வியாபாரம் என எதுவாக இருந்தாலும், அதைச் சுய ஒழுக்கத்துடன் நேர்த்தியாகவும், நூறு சதவிகிதம் முழுமையாகவும் செய்ய முடிந்தால், நீங்கள் நிறைவாழ்வு வாழும் செல்வந்தர்.
- 'இவர் மோசமானவர்', 'இந்த வேலையை நம்மால் செய்யவே முடியாது', 'இந்த விஷயம் நாம் நினைக்கிற மாதிரி நடக்காது', 'இவர் அளவுக்கு நமக்குத் திறமை கிடையாது' என்றெல்லாம் எப்போதும் முன்முடிவுகள் எடுக்காமல், எதையும் திறந்த மனதுடன் அணுக வேண்டும். அப்படிப்பட்ட மனம் வாய்த்தவர்கள், நிறைசெல்வம் பெற்றுவிட்ட செல்வந்தர்கள். ●



# சேமிப்பு... முதலீடு... எது நல்லது?









நிறைய பேருக்குப் பணம் தொடர்பாக எழும் அடிப்படைக் கேள்வி இதுதான்... 'நான் பணத்தைச் சேமிக்க வேண்டுமா, அல்லது முதலீடு செய்ய வேண்டுமா? சேமிப்பும் முதலீடும் ஒன்றேதானா... இல்லை, வேறு வேறா..?' 'சேமிப்பு' என்பதும் 'முதலீடு' என்பதும் பார்க்க ஒன்று போலத் தெரிந்தாலும் வேறு வேறு. இரண்டையுமே ஒவ்வொருவரும் செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில் வரப்போகும் ஒரு செலவுக்காக மாதா மாதம் கொஞ்சம் பணத்தைத் தனியாக எடுத்து வைப்பது சேமிப்பு. சுற்றுலா செல்வது, நகை வாங்குவது, வாகனம் வாங்குவது, குழந்தைகளின் படிப்பு, திருமணம் என்று பல காரணங்களுக்காக இப்படி நிறைய பேர் சேமிப்பார்கள். சேமிப்பை வங்கிக் கணக்கிலோ, அஞ்சலகச் சேமிப்புத் திட்டத்திலோ போட்டு வைப்பார்கள். இது ஒரு குறிப்பிட்ட அளவில் வளர்ந்துகொண்டே வரும். இடையில் கைவைக்காமல் பல ஆண்டுகள் சேமித்தால்தான் கணிசமான தொகை கிடைக்கும். லாபம் குறைவு என்றாலும், எந்தக் காலத்திலும் பணம் காணாமல் போகும் ஆபத்து இல்லை.

முதலீடு என்பது முற்றிலும் வேறானது. 'நாம் மட்டும் சம்பாதித்தால் போதாது, நம் பணமும் சம்பாதிக்க வேண்டும்' என்பதே அதன் அடிப்படை நோக்கம். புறநகர்ப் பகுதியில் வீட்டுமனை வாங்கி வைப்பது, பங்குச்சந்தையில் நிறுவனப் பங்குகளை வாங்குவது, மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களில் சேர்வது போன்றவையே முதலீடுகள். இதில் அதிக லாபமும் கிடைக்கலாம், ரிஸ்க்கும் அதிகம் உண்டு. சாமர்த்தியம் உள்ளவர்கள் தங்களுக்குத் தெரிந்த விஷயத்தில் மட்டும் முதலீடு செய்யலாம்.

நம் பணத்தைப் பெருக்க வேண்டும் என்று நினைத்தால் முதலீட்டையே நாட வேண்டும். குழந்தைகள் வளர வளர பணத் தேவை பெருகிக்கொண்டே இருக்கும். அவர்களின் உயர்கல்விச் செலவுகள், திருமணம் செலவு, வீடு வாங்குவது, வாகனம் வாங்குவது என

எல்லாவற்றுக்கும் கடனை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. சேமிப்பும் நாம் எதிர்பார்க்கும் அளவுக்கு வளராது. பணத்தைப் பெருக்குவதற்கான வழி, முதலீடுதான்.

முதலீட்டில்தான் நம்முடைய பணம் நாலாக, எட்டாகப் பெருகும். பாதுகாப்பான முதலீடு, ரிஸ்க் அதிகமுள்ள முதலீடு என இரண்டு வகை முதலீடுகள் இருக்கின்றன. அரசுத்துறை நிறுவனங்களின் கடன் பத்திரங்கள், நகர எல்லைக்கு அருகிலேயே இருக்கும் வீட்டு மனை போன்றவை பாதுகாப்பான முதலீடுகள். சேமிப்புத் திட்டங்களைவிடக் கடன் பத்திரங்களில் வட்டி அதிகம் கிடைக்கும். நகர எல்லைக்கு அருகிலேயே வீட்டு மனை வாங்கினால், அதன் மதிப்பு வேகமாகவும் உயரும். நாம் நினைக்கும் நேரத்தில் அதை விற்பதும் சாத்தியமாகும்.

26 வயதில் மகளுக்குத் திருமணம் செய்துவைக்க நினைக்கும் ஒருவர், மகளுக்கு 14 வயதாகும்போதே இப்படி எங்காவது மனை வாங்கி வைத்தால், அது சிறந்த முதலீடு. ஃபிக்ஸட் டெபாசிட்டில் பணம் போட்டு வைத்தால், அது பாதுகாப்பான சேமிப்பு. ஃபிக்ஸட் டெபாசிட்டில் பணம் அதிகபட்சம் நான்கு மடங்கு அளவுக்குப் பெருகும். வீட்டு மனை, அது இருக்கும் இடத்தைப் பொறுத்துப் பத்து மடங்கு, இருபது மடங்குகூட விலை உயரும். இதுதான் வித்தியாசம்.

ஒரு முதலீட்டில் எந்த அளவுக்கு அதிகமாகப் பலன் கிடைக்கிறதோ, அந்த அளவுக்கு அதிகமாக ரிஸ்க்கும் இருக்கும். உதாரணமாக, பங்குச்சந்தை முதலீடு என்பது ரிஸ்க் அதிகமானது. 100 ரூபாய் முதலீடு ஒரே ஆண்டில் 500 ரூபாயாகவும் ஆகலாம். 50 ரூபாயாகவும் குறையலாம்.


எவ்வளவு தூரம் நீங்கள் ரிஸ்க் எடுக்கலாம்? உங்கள் வயது என்னவோ, அத்தனை சதவிகித முதலீடு பாதுகாப்பான இடங்களில் செய்யப்பட்டிருக்க வேண்டும்; மீதி முதலீட்டில் நீங்கள் ரிஸ்க் எடுக்கலாம். உங்கள் வயது 30, உங்கள் முதலீடு ஒரு லட்சம் ரூபாய் என்றால், அதில் 30 ஆயிரம் ரூபாய் பாதுகாப்பான வகைகளில் முதலீடு செய்யப்பட்டிருக்க வேண்டும்; மீதி 70 ஆயிரம் ரூபாயில் நீங்கள் ரிஸ்க் எடுக்கலாம். வயது ஏற ஏற, ரிஸ்க் எடுப்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

பொதுவாக ஒவ்வொருவரும் தங்களது வருமானத்தில் இருபது சதவிகிதப் பணத்தையாவது எதிர்காலத் தேவைகளுக்காகச் சேமிக்கவும் முதலீடு செய்யவும் வேண்டும். இளம் வயதில் இந்தச் சேமிப்பு அதிகமாக இருக்க வேண்டும். அப்போது குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவச் செலவுகள் குறைவாக இருக்கும் என்பதால், ஐம்பது சதவிகிதம் வரைகூடச் சேமிக்கவும் முதலீடு செய்யவும் முடியும். இளமையில் சேமித்தால், முதுமையில் நிம்மதியாக இருக்க முடியும்.

முதலீடு செய்வதற்கு மிக உன்னதமான நேரம், உங்கள் 50 முதல் 60 வயது வரையிலான காலம்தான்! அப்போதுதான் உங்களது வேலை நிலைபெற்று, உயர்ந்த சம்பளம் வாங்கிக் கொண்டிருப்பீர்கள். ஓய்வுபெறும்போது கணிசமான தொகை கையில் இருக்கும். ஆனால் இந்த வயதில், அதிக ரிஸ்க் இல்லாத, பாதுகாப்பான முதலீடுகளையே நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

60 வயதுக்குப் பிறகு உங்களால் உழைக்க முடியாது; அதனால் வருமானமும் இருக்காது. ஆனால் இயல்பான குடும்பச் செலவுகள் அப்போதும் இருக்கும். அதற்கு யார் கையையும் எதிர்பார்க்காமல் இருக்க வேண்டுமானால், நீங்கள் சேமிப்பையும் முதலீட்டையும் இளம் வயதிலிருந்தே கணிசமாகச் செய்து வைத்திருக்க வேண்டும். ●


## வெண்மை சந்தா... மகளிர் தின சிறப்புச் சலுகை!



மார்ச் 8-ம் தேதி கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வெண்மை மாத இதழுக்கான சந்தா தொகையில் இந்த ஆண்டு முழுக்க சந்தா செலுத்தும் பெண்களுக்குச் சிறப்புச் சலுகை வழங்கப்படுகிறது.

**ஓர் ஆண்டு சந்தா: ரூ. ~~200~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 150/–**

**இரண்டு ஆண்டுகள் சந்தா: ரூ. ~~380~~/–**
**மகளிர் சலுகை சந்தா: ரூ. 300/–**

இச்சலுகையை முழுமையாகப் பயன்படுத்தி மகளிர் தங்களையும் தங்கள் இல்லத்தையும் சுற்றத்தையும் இன்னும் சிறப்பாகப் பேணி நலம் பெற வேண்டுகிறோம். (சந்தா செலுத்தும் வழிமுறைகளுக்கு 23-ம் பக்கத்தைப் பார்க்கவும்.)




RAMRAJ

## நிதிச் சுதந்திரம் வேண்டும்!

ஒருவர் நினைப்பது போல அவரது பொருளாதார இலக்குகளை அடைவதற்கு நிதிச் சுதந்திரம் வேண்டும். அஸ்திவாரம் இருந்தால்தான் வீடு கட்ட முடியும். அதுபோல நிதிச் சுதந்திரம் இருந்தால்தான் நிறைசெல்வம் சேர்க்க முடியும்.

நிதிச் சுதந்திரம் என்பது என்ன? அவசரமாக ஒரு மருத்துவச் செலவு ஏற்படுகிறது. அதற்கு யாரிடமும் கடன் வாங்கத் தேவையில்லாத சூழலில் நீங்கள் இருக்க வேண்டும். அத்தியாவசியமான ஒரு பொருள் வாங்க, வாங்கிய ஒரு கடனுக்குத் தவணை கட்ட, பொருத்தமான ஒரு திட்டத்தில் முதலீடு செய்ய... இப்படி எந்தச் செலவையும் நெருக்கடியாகக் கருத வேண்டியிருக்காத பணச்சூழல் அமைய வேண்டும். அதுவே நிதிச் சுதந்திரம்.

இதை அடைந்துவிட்டு நீங்கள் என்ன பொருளாதார இலக்கு வைத்தாலும், அதை நிச்சயம் அடையலாம்.



## அளவு தெரியுமா?

ஒரு செல்வந்தருக்கு இரண்டு மகன்கள். இரண்டு பேருமே இரண்டு துருவங்கள். மூத்தவனுக்கு நிறைய நண்பர்கள், இளையவனுக்கு நண்பர்களே இல்லை. மூத்தவன் பணத்தைத் தண்ணீர் போலச் செலவழிப்பான், இளையவன் சரியான கருமி. "அதிக செலவும் வேண்டாம், செலவே செய்யாமல் தவிர்க்கவும் வேண்டாம். அளவாகச் செலவு செய்யுங்கள்" என்று இருவரையுமே ஓயாமல் திட்டுவார் செல்வந்தர். இரண்டு பேருமே கேட்கவில்லை.

ஊருக்கு ஒரு துறவி வந்தார். அவரிடம் போன செல்வந்தர், தன் மகன்களைப் பற்றிப் புகார் சொன்னார். இருவரையும் அழைத்துவரச் சொன்னார் துறவி. அவர்களை ஆழ்ந்து பார்த்த துறவி, தன் இரண்டு உள்ளங்கைகளையும் விரித்து வைத்தபடி, "என் கைகளை மூட முடியாமல் இப்படியே இருந்தால் என்ன நினைப்பீர்கள்?" என்று கேட்டார். "உங்களுக்கு உடல் குறை என நினைப்போம்" என்றார்கள் இருவரும். துறவி தன் உள்ளங்கைகளை இறுக மூடிக்கொண்டு, "என் கைகளைத் திறக்க முடியாமல் இப்படியே இருந்தால் என்ன நினைப்பீர்கள்?" என்றார். "அப்போதும் உங்களுக்கு உடல் குறை என்றே நினைப்போம்" என்றனர்.



"பணம் நிறைய இருந்தும், அவசியமான தேவைகளுக்குக்கூடச் செலவழிக்காமல் இருந்தால், எவ்வளவு பணம் வைத்திருந்தாலும் நீங்கள் ஏழைதான். அதேபோல, எப்போதும் தேவையின்றி செலவழித்துக்கொண்டே இருந்தால், எவ்வளவு பணம் இருந்தாலும் நீங்கள் சீக்கிரம் ஏழையாகி விடுவீர்கள். சில நேரங்களில் கையை மூட வேண்டும், சில நேரங்களில் திறக்க வேண்டும்" என்றார் துறவி. இருவரும் புரிந்துகொண்டு விடை பெற்றார்கள்.



## கொடுத்தால் சுரக்கும்!

பெரும் பணக்காரர் ஒருவருக்குத் தொழிலில் லாபமும் நஷ்டமும் மாறி மாறி வந்துகொண்டிருந்தது. தான் சம்பாதிக்கும் பணம் தன்னிடம் தங்குமா என்ற பயம் அவருக்கு வந்தது. புகழ்பெற்ற ஒரு ஞானியைப் போய்ப் பார்த்தார் அவர். "உங்கள் ஊரில் இரண்டு கிணறுகளை எனக்காக வெட்டிக் கொடு! உன் பிரச்னையைத் தீர்க்க வழி சொல்கிறேன்" என்றார் ஞானி.

பணக்காரர் அப்படியே செய்தார். கிணறுகள் முழுமை பெற்றதும் ஊருக்கு வந்த ஞானி, "இந்த இரண்டு கிணறுகளில் ஒன்று எனக்கு வேண்டும். அதை மேலே உறை போட்டுப் பூட்டி வை! இன்னொரு கிணற்றை நான் உனக்குத் தருகிறேன். அதில் ஊர் மக்கள் எல்லோரும் வந்து தண்ணீர் பிடித்துக்கொள்ள அனுமதி கொடு. ஆறு மாதங்கள் கழித்துத் திரும்பவும் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஞானி போனார்.

தன் பிரச்னைக்கும் ஞானி சொன்னதற்கும் என்ன சம்பந்தம் என்று குழம்பினார் பணக்காரர். என்றாலும் ஞானி சொன்னதைச் செய்தார். தண்ணீர்ப் பஞ்சத்தில் தவித்துவந்த ஊர் மக்கள், இந்தக் கிணற்றில் தண்ணீர் பிடித்துப் போனார்கள். பணக்காரரைப் பாராட்டினார்கள். இந்தப் பாராட்டுகளால் உற்சாகமடைந்த பணக்காரர், தன் தொழிலைச் சிறப்பாகச் செய்தார். பெரும் பணம் சேர்ந்தது.

ஆறு மாதங்கள் கழித்து ஞானி வந்து தன் கிணற்றைத் திறக்கச் சொன்னார். அதைத் திறந்த பணக்காரருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஒரு சொட்டு தண்ணீர்கூட இல்லாமல் அது வறண்டு போயிருந்தது. "இந்தக் கிணற்றுத் தண்ணீர் போலவே பணத்துக்கும் மூன்று இயக்கங்கள் உண்டு. நல்ல வழியில் பயன்படுவது, தவறான வழியில் பயன்படுவது, பயன்படாமல் முடிந்துபோவது. உன் கிணற்றுத் தண்ணீர் ஊருக்கே நல்ல வழியில் பயன்பட்டதால், அங்கு சுரந்துகொண்டே இருந்தது. பணத்தையும் அதேபோல நல்ல வழியில் பயன்படுத்து, வளரும்!" என்றார் ஞானி. பணக்காரர் புரிந்துகொண்டார்.

## நிறைசெல்வத்தின் ரகசியம்!



உழைப்பு, கல்வி, அதிர்ஷ்டம் என்று பல்வேறு காரணங்களைவிட ஒருவரை செல்வந்தராக மாற்றும் முக்கியமான விஷயம், அவரது மனநிலைதான்! 'நம்மால் முடியும்' என்று மனநிலையை எவ்வளவுக்கு எவ்வளவு பெறுகிறீர்களோ, அந்த அளவுக்கு செல்வம் சேரும். ஆனால், இந்த உலகத்தில் மிகவும் கஷ்டமான விஷயம், ஒருவரின் மனநிலையை மாற்றுவதுதான்! 'ஒரு மீனைத் தண்ணீரிலிருந்து பிடித்துவந்து நிலத்தில் வாழப் பழக்குவது போன்ற கடினமான விஷயம் அது' என்று முதலீட்டு அறிஞர் வாரன் பஃபெட் சொல்வார். உங்கள் மனநிலையை அப்படி மாற்ற இந்த விஷயங்களைச் செய்யுங்கள்:

நிதி தொடர்பான புத்தகங்களைப் படியுங்கள். பணக்காரர்களின் வெற்றி ரகசியங்களை அறிந்துகொள்ளுங்கள். மனிதர்களையும் இயந்திரங்களையும் பணத்தையும் நிர்வாகம் செய்வதற்குப் பழகுங்கள். உங்களின் வேலை மற்றும் தொழிலுக்கு மற்றவர்களின் நேரத்தையும் திறமைகளையும் எப்படிப் பயன்படுத்துவது என்று கற்றுக்கொள்ளுங்கள். கடன் வாங்குவதைக் குறைத்துச் சொத்துகளை வாங்குங்கள். தேவையற்ற செலவுகளைத் தள்ளிப் போடுங்கள், அந்தச் செலவையே பிறகு செய்யாமல்விட வாய்ப்புண்டு. தேவையான நேரங்களில் துணிச்சலாக ரிஸ்க் எடுங்கள். பயத்தையும் சந்தேகத்தையும் உதறித் தள்ளுங்கள். மற்றவர்கள் 'பிரச்னை' என்று பார்க்கும் விஷயங்களில் உங்களுக்கான வாய்ப்பு இருக்கிறதா என்று பாருங்கள். நீங்கள் பணக்காரர் ஆகிவிட்டது போலவே கற்பனை செய்யுங்கள்.


RAMRAJ

# பண நிர்வாகம் பழகுங்கள்!

வீடு, அலுவலகம், தொழில், வியாபாரம் என்று பலவற்றையும் நன்கு நிர்வாகம் செய்யத் தெரிந்த பலருக்குப் பணத்தை நிர்வாகம் செய்யத் தெரிவதில்லை. மற்ற நிர்வாகங்கள் போலவே, பண நிர்வாகமும் முக்கியம். அதைச் சரியாகச் செய்யத் தெரியாதவர்கள், எதிர்பாராத சூழல்களில் தடுமாறிப் போவார்கள்.

பண நிர்வாகத்தை நீங்கள் நேர்த்தியாகச் செய்கிறீர்கள் என்பதை அறிவது எப்படி? இதையெல்லாம் உங்களால் சொல்ல முடிந்தால், நீங்கள் சிறந்த பண நிர்வாகி.

- ஒவ்வொரு மாதமும் சீரான வருமானம் வருவதை உறுதி செய்துள்ளேன். எவ்வளவு சம்பாதிக்கிறோம் என்பதைத் தெரிந்து வைத்துக்கொண்டு, அதற்குள் செலவுகளைக் கட்டுப்படுத்தி வாழ்கிறேன்.
- ஒவ்வொரு ரூபாயும் எங்கிருந்து வருகிறது, எங்கு போகிறது என்பதைக் கவனிக்கிறேன். 'நாம் எவ்வளவு செலவு செய்கிறோம்', 'எதற்காகச் செலவு செய்கிறோம்' என்பதையும் தெரிந்து வைத்திருக்கிறேன்.
- கல்விக் கட்டணம், கடன் தவணைகள், மின்சாரம் உள்ளிட்ட மாதாந்திரக் கட்டணங்கள், இன்சூரன்ஸ் பிரீமியம் போன்ற எல்லாவற்றையும் யாரிடமும் கடன் வாங்காமல் உரிய காலத்தில் கட்டிவிடுகிறேன்.
- ஃபர்னிச்சர்கள், உடைகள், எலெக்ட்ரானிக் கருவிகள், வீட்டு உபயோகப் பொருட்கள், காலணிகள் எனக் குடும்பத்தில் எல்லோருக்கும் அவசியம் தேவைப்படும் பொருட்களை எந்தச் சிரமமும் இல்லாமல் வாங்கி விடுகிறேன்.
- எது அவசியம், எது ஆடம்பரம் என்ற எல்லைக்கோடு எனக்குத் தெரியும். இதை நான் உணர்ந்திருப்பது போலவே, என் குடும்பத்துக்கும் உணர்த்தியிருக்கிறேன்.
- அவசியமான எல்லாவற்றையும் மாதாந்திர பட்ஜெட்டில் வாங்குவது போலவே, சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் மாதா மாதம் கணிசமான தொகை ஒதுக்குகிறேன்.
- எனக்கும் வாழ்க்கைத்துணைக்கும் ஓய்வுக்காலத் தேவைக்காக என்று ஒரு குறிப்பிட்ட சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து தனியாக சேமித்து வருகிறேன்.
- வீடு வாங்குவது, வாகனம் வாங்குவது, நகைகள் வாங்குவது என்று பெரிய செலவுகளுக்கு முன்கூட்டியே தெளிவாகத் திட்டமிட்டுப் பணம் சேமிக்கிறேன்.
- நான் வாங்கியிருக்கும் கடன்கள் எவ்வளவு, அதற்கு எவ்வளவு வட்டி கட்டுகிறேன் என்பதை அறிந்து வைத்துள்ளேன். எந்தக் கடனும் கழுத்தை நெறிக்காமல் பார்த்துக்கொள்கிறேன்.
- கிரெடிட் கார்டை கவனமாகப் பயன்படுத்துகிறேன். அபராத வட்டி கட்டுவது போன்ற சூழலுக்குள் எப்போதும் சிக்குவதில்லை.
- மற்றவர்களுக்குக் கடன் கொடுக்கும் விஷயத்திலும் கவனமாக இருக்கிறேன். 'திரும்பி வராது' என்று தெரியும் சூழலில் சாமர்த்தியமாக முடிவெடுப்பேன். அவர்களுக்குக் கடன் கொடுக்காமல் தவிர்த்துவிடுவேன்.
- குடும்பத்தின் வரவு செலவுகள் குறித்து வாழ்க்கைத்துணை மற்றும் குடும்பத்தினருடன் அவ்வப்போது உரையாடுகிறேன்.
- சேமிப்பு மற்றும் முதலீடுகள் குறித்து அவ்வப்போது படித்துத் தெரிந்துகொள்கிறேன். குடும்பத்தின் எதிர்காலத் தேவைகள் குறித்த அக்கறையுடன், பாதுகாப்பான முதலீடுகளைச் செய்கிறேன்.

இந்த எல்லாமே உங்களுக்குப் பொருந்தினால், பண நிர்வாகத்தில் நீங்கள் கில்லி!





Owned, Published by K.R. NAGARAJAN, Published from 10, Sengunthapuram Mangalam Road, TIRUPUR - 641 604 & Printed by B. ASHOK KUMAR at RATHNA OFFSET PRINTERS, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor : T.J. GNANAVEL



Inners for Winners
RAMRAJ ©
VESTS
BRIEFS • TRUNKS
மனதில் உறுதியுடனும்,
நெஞ்சில் வலிமையுடனும்
திகழுங்கள்.
ராம்ராஜ்-ன் பிரத்தியேக ஆண்கள் உள்ளாடைகள்
அணியும் போது மனதில் உறுதியுடனும்,
உள்ளத்தில் வலிமையுடனும், உடலில் இதமாகவும்,
சுகமாகவும் உணர்வீர்கள்...
Shreyas Iyer - Cricketer
SCAN QR CODE FOR
STORE LOCATION
SUKRA SUPER FINE COTTON VESTS
RISE-UP Premium Banians
ROMEX BANIANS | BRIEF | TRUNKS
COMPACT PREMIUM COTTON RIB VESTS
Breeze Eye Let Vests
WinStripe STRIPED BANIANS
ARCHERY Gym Vest
ACOSTE BANIANS | BRIEF | TRUNKS
suriya RICH COTTON BRIEF
udaya RICH COTTON BRIEF
minar FINE COTTON BRIEF
merc MERCERISED BRIEF
target FINE TRUNKS
softex FINE TRUNKS
imaxs RIB TRUNKS
ARROW RIB TRUNKS
VINTRACK FINE TRUNKS
Available @ Ramraj Showrooms & All leading textile shops | Shop online @ www.ramrajcotton.in

Venmai Monthly - Postal Registration No.TN/TRU/28/2022-24. Registered with the Registrar of Newspapers for India under No.TNTAM/2016/68519. Day of Publishing 01-10-2024. Posted at Tirupur BPC on 5th of every month.

